# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஐப்பசி 28 புதன்கிழமை (14-11-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:353


### ஜனாதிபதி சந்திரிகா திட்டவட்டமாக அறிவிப்பு

# தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பின் ஆதரவை பொ.ஐ.முன்னணி ஒருபோதும் கோராது!

## அரசமைக்கப் பெரும்பான்மைப் பலம் கிடைக்காத நிலை ஏற்பட்டாலும் கூட

கொழும்பு,நவம்பர் 14

**ஆட்சி அமைப்பதற்கு வேண்டிய பெரும்பான்மைப் பலம் கிடைக்காவிட்டாலும் கூட, தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பின் ஆதரவைத் தாம் கோரப் போவதில்லை என்று ஜனாதிபதி குமாரதுங்க திட்டவட்டமாக அறிவித்திருக்கின்றார்.**

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை நேற்று வெளியிட்டு வைத்த பின்னர் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சு நடத்துவதாயின் அதற்கு அவர்கள் தமது ஈழக் கோரிக்கையைக் கைவிட வேண்டும் என்றும் அந்த மாநாட்டில் உரையாற்றியபோது ஜனாதிபதி நிபந்தனை விதித்தார்.

ஆனால் பொ.ஐ.முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அப்படி நிபந்தனை ஏதும் தெரிவிக்கப்பட்டிருக்க

(2ஆம் பக்கம் பார்க்க)

### பொ.ஐ.முன்னணி தேர்தல் விஞ்ஞாபனம் வெளியானது

## பேச்சு மூலம் அரசியல் தீர்வு என்ற வழமையான 'பல்லவி' இம்முறையும்!

கொழும்பு,நவ.14

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று வெளியிடப்பட்டது. அதில் வழமையான 'பல்லவி'கள் சில இடம்பெற்றுள்ளன. 'பேச்சு மூலமே அரசியல் தீர்வு' என்பது அதில் ஒன்று. மற்றது 'நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்படும்' என்பதாகும்.

'சிறுபான்மை மக்களுக்கு - குறிப்பாகத் தமிழ் மக்களுக்கு - பிரத்தியேகமான பிரச்சினைகள் இருக்கின்றன. இந்தப் பிரச்சினைக்கான இறுதித் தீர்வு பேச்சு மூலம் அரசியல் ரீதியில் காணப்பட வேண்டும் என்பதில் நம்பிக்கையாக இருக்கின்றோம் - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் அவரது வாசஸ்தலத்தில்

(2ஆம் பக்கம் பார்க்க)

### தென்னிலங்கைக் கிளர்ச்சியின்போது

## 6,000 பேரைக் கொன்றதை ஒப்புக்கொள்கிறது ஜே.வி.பி.!

கொழும்பு,நவ.14

தாங்கள் தென்னிலங்கையில் கிளர்ச்சி நடத்திய காலத்தில் ஆறாயிரம் மக்களைக் கொன்றதை ஜே.வி.பி. வருத்தத்துடன் ஒப்புக் கொண்டிருக்கின்றது.

தமது ஜனநாயக உரிமைகளை ஐ.தே.கட்சி அரசாங்கம் மறுத்துத் தம்மை அப்படியான ஒரு நிலைக்குத் தள்ளிவிட்டது என்று ஜே.வி.பி. பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

வானொலி நிகழ்ச்சி ஒன்றில் நேயர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜே.வி.பி. கடந்த காலத்தில் தவறிழைத்தது என்றும் அவர் ஒப்புக்கொண்டார். ஆனால் இனிமேல் கட்சி அந்தத் தவறைச் செய்யாது என்றும் கட்சி இனி ஒருபோதும் ஆயுதம் தூக்காது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கணவர் விஜயகுமாரதுங்கவை ஜே.வி.பி. கொன்றது என்ற குற்றச்சாட்டை ரில்வின் சில்வா மறுத்தார். (உ)




அனைவருக்கும் உதயனின் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!


## ஆப்கான் தலைநகர் காபூல் வடக்குக் கூட்டணி வசம்!

### தலிபான்கள் கந்தகார் நோக்கித் தப்பி ஓட்டம்



மேலே:- காபூல் எல்லையில் வடக்குக் கூட்டணிப் படையினரை வரவேற்கும் மக்கள்.
கீழே:- காபூலை நோக்கி விரையும் வடக்குக் கூட்டணிப் படைகள்.
(விரிவான செய்தி 8 ஆம் பக்கத்தில்)



## மங்களவின் மெய்க்காவலா் மூவருக்கு விளக்கமறியல்

கொழும்பு,நவ.14

அக்குறஸ்ஸ பகுதியில் கடந்த 4 ஆம் திகதி ஐ.தே.கட்சி ஆதரவாளர்கள் என்று சந்தேகிக்கப்படும் பத்துபேர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பாக அமைச்சர் மங்கள சமரவீரவின் மெய்ப்பாதுகாவலர்களான மூன்று பொலீஸார் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

போஸ்டர் ஒட்டிக் கொண்டிருந்த ஐ.தே.கட்சி ஆதரவாளர்கள் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் பல இளைஞர்கள் காயமடைந்தனர். ஒருவர் ஒரு கண்ணை இழந்திருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விவகாரம் மாத்தறை சிரேஷ்ட நீதிவான் ஏ.எம்.மொகமட் மக்கி முன்னிலையில எடுத்துக் கொள்ளப்பட்ட சமயம் நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியிருந்த - அமைச்சர்களின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த மூவரையும் கைது செயயுமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

அதன் பின்னரே அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

(2ஆம் பக்கம் பார்க்க)

**இணைப்பை கேட்டு வாங்குங்கள்!**

இன்றைய உதயன் நாளிதழ் அதிக பக்கங்களுடன் செய்திப் பகுதி தனியாகவும் தீபாவளிச் சிறப்பிதழ் தனியாகவும் வெளியாகியுள்ளது. தீபாவளிச் சிறப்பிதழ் இணைப்பை தவறாது கேட்டு வாங்குங்கள்.

## ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட வேட்புமனுவை நிராகரிக்கக் கோரும் வழக்கு தள்ளுபடி!

கொழும்பு,நவ.14

யாழ்.மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தாக்கல் செய்த வேட்புமனுவை நிராகரிக்கும்படி கோரி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று தள்ளுபடி செய்யப்பட்டது.

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின சார்பில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளரான கே.சிவாஜிலிங்கத்தின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு மீதான விசாரணை நேற்று நடைபெற்றது.

ஈ.பி.டி.பியின் வேட்புமனுவை நிராகரிக்க வேண்டும் என்பதற்கு மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்ட காரணங்கள் மனுவை நிராகரிக்கப் போதுமானவையல்ல என்று தெரிவித்து, மனுவைத் தள்ளுபடி செய்தனர் அதனை விசாரித்த நீதியரசர்கள். (உ-6)




தமிழர் விடுதலைப் போரில் களம் பல கண்ட தமிழன்
சிறைச்சாலைகளில் ஆண்டுகள் பல தவமிருந்தவன்
மாவை.சோ.சேனாதிராசா அவர்களே

05-12-2001
தேர்தல்

X 12

எங்கள் தெரிவு இல. 12



(C/15262)

# இந்துக்களின் நலன்களைப் பேண அளவற்ற தியாகங்களைச் செய்தவர் அமரர் மகாலிங்கம்

## பிறந்ததின நினைவு நிகழ்வில் முன்னாள் நீதிபதி உரை

யாழ்ப்பாணம்,நவ.14

இந்துக்களின் நலனைப் பேணுவதற்காக அமரர் மகாலிங்கம் அளவற்ற தியாகங்களைச் செய்துள்ளார். அமரர் இந்து சமயப் பேரவையின் வளர்ச்சிக்காக ஓய்வு ஒழிச்சல் இன்றிப் பாடுபட்டு உழைத்தவர்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட முன்னாள் நீதிபதி மு.திருநாவுக்கரசு.

இந்து சமயப் பேரவையின் உப தலைவரும், உடுவில் பிரதேச செயலருமான அமரர் ஆ.மகாலிங்கத்தின் 60ஆவது ஆண்டு பிறந்ததின நினைவு நிகழ்வு அண்மையில் ஏழாலையில் உள்ள சைவச் சிறுவர் இல்லத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே முன்னாள் நீதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமரர் மகாலிங்கத்தால் உருவாக்கப்பட்ட இந்துசமயப் பேரவையை பலமுள்ள அமைப்பாகத் திகழச் செய்வதற்கு நாம் அனைவரும் வேறுபாடுகளை மறந்து உழைக்க வேண்டும். இன்று எமது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழ்நிலையில் இதுபோன்ற செயற்றிறன் பொருந்திய இந்து அமைப்புக்களுக்கு எம்மைப் போன்றவர்கள் என்றும் தாராளமாக உதவுவதற்கும் இதில் இணைந்து செயற்படுவதற்கும் தயாராகவுள்ளோம்.

எமது மதத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு செயற்றிறன் பொருந்திய அமைப்புக்களே அவசியம் தேவையாகவுள்ளது. ஆகையால் அனைத்து மக்களும் இதுபோன்ற அமைப்புக்களுக்கு உதவி வழங்குவதன் மூலம் எமது நலனைப் பாதுகாப்பதற்கும், எமது மக்களின் உரிமையை மீட்டெடுப்பதற்கும் உதவியாக இருக்கும் - என்றார்.

இந்து சமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சீ.விநாசித்தம்பி இந் நிகழ்வுக்குத் தலைமை வகித்து உரையாற்றுகையில்:-

எமது பேரவைப் பணிகள் சிறப்புடன் மிளிர மகாலிங்கம் அவர்கள் மேற்கொண்ட அர்ப்பணிப்புள்ள அபரிமிதமான பணிகள் என்றும் பாராட்டப்பட வேண்டியவை. அவரது சொல்லும், செயலும் ஒன்றாகவே இருந்தன. இன்றைய உலகில் காலை ஒரு சொல்லும், மாலை ஒரு சொல்லுமாக பேசுபவர்களே அதிகமாக உள்ளனர். ஆனால் அமரர் மகாலிங்கம் சொல்லில் பிசகாதவராக, அருமையான பண்பாளராகத் திகழ்ந்தவர். பதவி வெறி, மதவெறி, இனவெறி அற்றவர். தீயதைச் சிந்திக்கமாட்டார். நல்லதையே எண்ணுவார்; நல்லதையே செய்வார். இதனால்தான் அவருடைய புகழ் அவர் இறந்த பின்பும் நிலைத்தபடியே இருக்கின்றது - என்றார்.

முன்னாள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தனது உரையில்:-

நடைபெற்றுக் கொண்டிருக்கும் போரில் முழுமையாகப் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாண இந்து சமயப் பேரவைக்கும், அதனால் நிர்வகிக்கப்படும் கைதடி சைவச் சிறுவர் இல்லத்திற்கும் அதன் புனரமைப்புக்காகவும், அதில் தங்கிவாழும் ஏழைச் சிறுவர்களுக்காகவும், வடக்கு- கிழக்கு புனர்வாழ்வு, அபிவிருத்தி அதிகாரசபை எந்தவித உதவியையும் வழங்காதிருப்பதற்கான காரணத்தை புனர்வாழ்வு அமைச்சிற்குப் பொறுப்பாகவிருக்கும் டக்ளஸ் தேவானந்தா என்றோ ஒருநாள் கூறியே தீரவேண்டும்.

சாதாரண பொதுமக்கள் இந்து சமயப்பேரவைக்கு ஓரளவு உதவி வருவதால், மிகச் சிறந்த முறையில் இத்தகைய நிறுவனங்கள் இயங்கி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. அமரர் மகாலிங்கம் இந்துக்களை ஒற்றுமைப்படுத்தி இந்து சமயப் பேரவையை நல்ல முறையில் வழிநடத்திய மாபெரும் தலைவர் ஆவார். அவருடைய கைகள் கறைபடியாதவை; கண்ணியம் மிக்கவர்; சிறந்த சிந்தனையாளர்; மும்மொழிகளில் சிறந்த பாண்டித்தியம் பெற்றவர்; யாருக்கும் அடிபணியாத சுபாவம் உள்ளவர்.

மிகுந்த ஆத்மீக பலம் பொருந்தியவர்கள், அறிவாற்றல் படைத்தவர்கள் ஆகியோரை வழிநடத்திவரும் இந்து சமயப் பேரவையை பலம் பொருந்திய அமைப்பாக மாற்றுவதற்கு உலகில் வாழும் முழு இந்துக்களும் தமது பேராதரவை வழங்கவேண்டும் என்றார். (க-7)

## யாழ்.வாசிக்கு 6 மாதச் சிறை

கசிப்பு வைத்திருந்தமை தொடர்பான வழக்கில் தண்டப்பணம் செலுத்தத் தவறிய ஒருவருக்கு யாழ். நீதிவான் நீதிமன்றம் 6மாதச் சிறைத் தண்டனை வழங்கியது.

யாழ்ப்பாணம் அபூபக்கர் வீதியைச் சேர்ந்த சண்முகம் சந்திரன் என்ற நபருக்கே கசிப்பு வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து தண்டப்பணமாக 2ஆயிரத்து 500ரூபாவும் தர்மப்பணமாக ஆயிரம் ரூபாவும் செலுத்த வேண்டும் என்று நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார்.

குற்றப்பணம் செலுத்த வசதி இல்லை என்று குற்றவாளி தெரிவித்ததைத் தொடர்ந்து இவருக்கு 6 மாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இவர் பிறிதொரு வழக்கில் 2வருட மறியலில் தண்டனை அனுபவித்து வருவதால் அதே காலப்பகுதிக்குள் தற்போது விதிக்கப்பட்டுள்ள 6 மாத கால மறியல் தண்டனையையும் வழங்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (க-6)

## விவசாயிகளுக்கு நஷ்டஈடு

வலி.தெற்கு, நவ.14

வாழைச் செய்கையில் நஷ்டமடைந்த விவசாயிகளுக்கு 5 லட்சம் ரூபாவை வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஒதுக்கியுள்ளார்.

உரும்பிராய், நீர்வேலி மற்றும் புத்தூர் பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மேற்படி நிதி பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. (க-185)

## கரை ஒதுங்கிய இளைஞர் சடலம்

யாழ்ப்பாணம்,நவ.14

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் நேற்று முன்தினம் கொழும்புத்துறை கடற்கரைப் பகுதியில் கரையொதுங்கிய இளைஞன் ஒருவரின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அடையாளம் காணப்படாத இந்த இளைஞனின் சடலத்தை நேரில் சென்று பார்வையிட்ட யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் திருமதி இளங்கோவன் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சடலத்தை அனுப்பி பிரேத பரிசோதனை மேற்கொள்ளுமாறு யாழ்.பொலீஸாருக்கு உத்தரவிட்டார். (க-6-15)

### மங்களவின்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களை இருவார காலம் விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் பாதிப்புற்றோரின் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ஆனந்த விஜேசேகர, இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக நீதியான விசாரணை ஒன்று நடைபெறுவதை உறுதிப்படுத்துவதற்காக அமைச்சர் மங்கள சமரவீரவையும் கைது செய்ய வேண்டும் என நீதிமன்றத்தில் கோரினார்.

பொலீஸாரின் அறிக்கையை நன்கு பரிசீலித்த பின்னர் இந்தக் கோரிக்கை குறித்துத் தனது முடிவை அறிவிப்பதாக நீதிவான் தெரிவித்தார். (உ)


ராஜா யாழ்ப்பாணம்
ரசிகப் பெருமக்களுக்கு எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்
இன்று முதல்
சரத்குமார், சுகன்யா, கவுண்டமணி மற்றும் பலர் நடித்த
இளவரசன்
தினசரி 10.30, 2.30 (பகல் நேரம்)
விசேட காட்சி 10.30, 2.5 (பகல் நேரம்)
அடுத்த வெளியீடு
ஆளவந்தான்
(C/18920)

லஷ்சுமி இணுவில்.
தீபாவளி வெளியீடு
விஜய், சிம்ரன், சிவாஜி நடித்த
ஒன்ஸ்மோர்
காட்சிகள்: 10.30, 2.30
விசேட காட்சி: 8.00, 5.30 (ப.நே.)

நிறைஞ்சனாஸ் சங்கானை
குணால், மோனல், கரண் நடித்த
பார்வை ஒன்றே போதுமே
(சீஸ்லன்)
தினசரி: 11.00, 2.30, 5.30 (ப.நே.)

நாகம்ஸ் சுன்னாகம்
ஷியாம், ஜோதிகா, சிம்ரன் நடித்த
12-B
வாழ்க்கையில் எதிர்பாராத திருப்பங்கள்
காட்சிகள்:- 11.00, 2.30, 6.30 (பகல் நேரம்)

நலங்காணும் நன்னாளாம் இந்நாளில் எங்கள் இதயம் நிறைந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்
மங்கையர் மனம் கொள்ளை கொள்ளும் தங்க நகைகளை
குறிப்பிட்ட தவணையில் தரமாகவும் நியாயமாகவும் பெற்றிட நாடுங்கள்
சாரங்கா நகைமாடம் 177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே:2480
சாரங்கன் நகைமாடம் அன்ட் சென்ரர் 45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
அருள்முருகன் நகைமாடம் 96/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C/19303)


## சம்மாந்துறைக் கல்வி அலுவலகம் முன்

# தொண்டர் ஆசிரியர் திங்கள் முதல் சாகும்வரையான உண்ணா நோன்பு

அம்பாறை,நவ.14

சம்மாந்துறை கல்வி வலய அலுவலகத்துக்கு முன்னால் தொண்டர் ஆசிரியர்கள் சுமார் 150 பேர் சாகும்வரையான உண்ணாவிரதத்தை நேற்றுமுன்தினம் ஆரம்பித்துள்ளனர்.

வடக்கு - கிழக்கு தொண்டர் ஆசிரிய நியமனம் தொடர்பாக கடைப்பிடிக்கப்படும் நடைமுறைகளிலுள்ள முரண்பாட்டை நீக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இடைநிறுத்தப்பட்ட தொண்டர் ஆசிரியர்களை மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ள வேண்டும் என்பதே அவர்களின் மற்றொரு கோரிக்கையாகும்.

இந்தப் போராட்டம் குறித்து சம்மாந்துறை தொண்டர் ஆசிரியர் சங்கச் செயலர் டி.வேந்தன் கருத்துத் தெரிவிக்கையில் -

"சாகும்வரையிலான உண்ணா விரதத்தில் ஈடுபட்டிருக்கும் எமது உறுப்பினர்களில் பலர் உடல் சோர்ந்து பலவீனமான நிலையை அடைந்துள்ளனர். ஆசிரியர் ஒருவர் சோர்ந்து மயங்கியதால், அவசரமாக சம்மாந்துறை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளார். எவ்வாறாயினும் எமது போராட்டம் தொடரும். நீதி கிடைக்கும்வரை அது ஓயாது."

- என்று அவர் சொன்னார். (க)

### பேச்சு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்து நேற்று மாலை வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம்பெறும் ஏனைய முக்கிய அம்சங்கள் வருமாறு:-

☆ இனப்பிரச்சினைத் தீர்வுக்காக தமிழ், முஸ்லிம் மக்களது சகல பிரதிநிதிகளுடன் பேச்சுக்கள் நடத்தப்படும்.

☆ ஜனநாயக வழிக்கு வந்துள்ள ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் பேச்சு நடத்தப்படும்.

☆ இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் நோக்கில் அர்த்த புஷ்டியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

☆ யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து சமத்துவத்தின் அடிப்படையில் அரசமைப்பின் மூலம் சமாதானத்தை ஏற்படுத்துவது பிரதான குறிக்கோளாகும்.

☆ புதிய தேர்தல் முறை அறிமுகம் செய்யப்படும்.

☆ தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த சமூக நலத்திட்டங்கள் பலப்படுத்தப்படும். அவர்களின் சம்பளத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

### தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை.

செய்தியாளர் மாநாட்டில் ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:-

புலிகளுடன் பேச்சு நடத்தத் தயாராக இருப்பதாக ஏற்கனவே தெரிவித்துவிட்டோம். ஆனால் புலிகள் தான் இன்னும் பேச்சுக்கு வரவில்லை.

சமாதானத்தை ஏற்படுத்த புலிகளுடன் பேச இப்போதும் தயாராகவே இருக்கிறோம். ஈழக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டு அவர்கள் பேசுக்கு வரவேண்டும்.

நோர்வேயின் சமாதான முயற்சியை நாம் இன்னமும் தொடர்கின்றோம். புதிய அரசு வந்தபின் அதனுடன்தான் பேசுவோம் என்று புலிகள் நோர்வேயிடம் தெரிவித்துள்ளனர்.

பேச்சுக்காக, நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் இடம்பெற்ற முயற்சிகள் இறுதிக்கட்டத்தை அடைந்து உடன்பாடு கைச்சாத்திடவிருந்த சமயம் புதிய நிபந்தனைகளைப் புலிகள் முன்வைத்தனர். அச்சமயம் எமது அரசு ஸ்திரமற்ற நிலையில் இருந்ததால் பேச்சுக்களுக்கான முயற்சிகளில் தடை ஏற்பட்டது.

இனப்பிரச்சினைக்கு யுத்தம் மூலம் தீர்வு காணவேண்டும் என்று நாம் விரும்பவில்லை. பேச்சு மூலம் தீர்வு காணவே விரும்புகிறோம்.

பொ.ஐ.முன்னணி அரசின் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். அவர்களின் நம்பிக்கைக்காக அவர்களுக்கு உகந்த தீர்வை முன்வைக்க வேண்டியது எமது கடமையாகும்.

நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஐதேக ஆதரவு வழங்குவதில்லை. இந்நிலையில் எதிர்வரும் தேர்தலில் ஐ.தே.கட்சி வென்றால் எவ்வாறு அவர்களுடன் ஆட்சி நடத்துவது என்பதுதான் இப்போதுள்ள பிரச்சினை - என்றார் அவர். (உ-3)


பொதுத் தேர்தல் - 2001
ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரக் கூட்டம்
இன்று பிற்பகல் 2.30 மணிக்கு
கரணவாய் மூத்த விநாயகர் கோயிலடியில்
தலைமை:- சீ.கணபதிப்பிள்ளை
(ஐ.தே.கட்சி யாழ்.மாவட்ட வேட்பாளரும், உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்க முன்னாள் தலைவரும்)
ஐ.தே.கட்சியின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளர்
தி.மகேஸ்வரனும் உரையாற்றுவார்.
அனைவரும் வருக.
ஐக்கிய தேசியக் கட்சி, யாழ்.மாவட்டம்.
(C/19304)


## மரண அறிவித்தல்

### திருமதி ஸ்ரீகாந்தன் கெங்காதேவி

உரும்பிராய் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கெங்காதேவி ஸ்ரீகாந்தன் நேற்று (13.11.2001) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஸ்ரீகாந்தனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தர்மலிங்கம் (முன்னாள் விதானையார்) மற்றும் அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும் பூபாலசிங்கம் - கண்மணி தம்பதியரின் அன்பு மகளும், ஹரிஜாந்தி (கனடா), சுயந்தி, நிசந்தி, சிரோசன் (கனடா), லக்ஷி ஆகியோரின் அருமைத் தாயாரும், தர்மபாலன், கிருஸ்ணபாலன் (கனடா), ஞானதேவி, தர்மதேவி (ஆசிரியர், வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம்), ரகுபாலன் (இத்தாலி), மல்லிகாதேவி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சிவகுமார் (ஆசிரியர், ஏழாலை) அன்பு மாமியாரும் கீர்த்திகாவின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நேற்று 13.11.2001 இல் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் வேம்பன் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*மானிப்பாய் வீதி,*
*உரும்பிராய் மேற்கு,*
*உரும்பிராய்.*

(C/19301)

தகவல்:
ஸ்ரீகாந்தன்
(கணவர்)

# அமெரிக்க விமான அனர்த்தத்துக்கு இயந்திரக் கோளாறே காரணமாம்!

நியூயோர்க்,நவ.14

நியூயோர்க் நகருக்கு மேலே இடம்பெற்ற விமான அனர்த்தம் தொழில் நுட்பக் கோளாறுகளால் ஏற்பட்ட ஒரு விபத்துச் சம்பவம் என்று ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்திருப்பதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

260பேருடன் ஜோன் எவ் கெனடி விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட 'எயார் பஸ்' ஏ-300 ஜெற் விமானம் நேற்றுமுன்தினம் காலை நியூயோர்க் நகருக்கு மேலே வெடித்து வீழ்ந்து நொறுங்கியது தெரிந்ததே.



வீழ்ந்து நொறுங்கிய எயார் பஸ் விமானத்தின் மாதிரித் தோற்றம்

இந்த விமானத்தின் தகவல் சேகரிப்புக் கருவி மற்றும் உரையாடல் பதிவு கருவி ஆகிய இரு கறுப்புப் பெட்டிகளும் சிதைவுகளுக்குள் இருந்து மீட்கப்பட்டிருக்கின்றன. விமானத்தில் இருந்த 251 பயணிகள் மற்றும் ஒன்பது பணியாளர்களில் எவருமே உயிர் பிழைக்கவில்லை.

விமானம் வீழ்ந்து நொறுங்கிய நியூயோர்க் றொக்வே பீச் பகுதியில் குடியிருப்புகளில் வசித்த எட்டுப் பேர் இந்த அனர்த்தத்தின் பின்னர் காணாமற்போயிருக்கின்றனர். விமான சிதைவுகளுக்கு இடையில் இருந்து 225 சடலங்களை மீட்புப் பணியாளர்கள் வெளியே எடுத்துள்ளனர். (ஐ-4)

# நேபாள இளவரசி பிரெக்ஷா ஹெலி விபத்தில் மரணம்!

காத்மண்டு,நவ.14

நேபாள இளவரசி பிரெக்ஷா திரேந்திரா ஹெலி விபத்துச் சம்பவம் ஒன்றில் உயிரிழந்து விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

நேபாள மன்னர் குடும்ப உறுப்பினர்கள் உட்பட ஆறுபேரை ஏற்றிச் சென்ற ஹெலிக்கொப்டர் தலைநகர் காத்மண்டுவில் இருந்து 550 கிலோ மீற்றர் தொலைவில் றாரா ஏரிப் பகுதியில் வீழ்ந்து நொறுங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த அனர்த்தத்துக்கான காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை.

வீழ்ந்து நொறுங்கிய ஹெலி தென்மேற்கு நகரான றேப்பால்குஞ் பகுதியில் இருந்து புறப்பட்டு சிறிது நேரத்தில் தரைக்கட்டுப்பாட்டு நிலையத்துடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டன.

உயிரிழந்த இளவரசி பிரெக்ஷா படுகொலை செய்யப்பட்ட முன்னாள் மன்னர் பிரேந்திராவின் சகோதரரான திரேந்திராவின் துணைவியும் தற்போதைய மகாராணி கோமலின் இளைய சகோதரியும் ஆவார். இவரது கணவர் திரேந்திரா மன்னர் பிரேந்திரா குடும்பத்தவர்களுடன் சேர்த்து படுகொலையுண்டவர்களில் ஒருவராவார்.

நேபாள அரச குடும்பத்தினர் அடுத்தடுத்து அவலச்சாவுகளில் சிக்கி வருவது அந்நாட்டில் பொதுமக்களிடையே மிகுந்த துயரத்தையும் ஐயங்களையும் ஏற்படுத்தியிருக்கின்றது. (ஐ)

## குழந்தைகள் ஐவரும் பலி!

நியூயோர்க்,நவ.14

விபத்துக்குள்ளான அமெரிக்க விமானத்தில் 246 பயணிகள் இருந்ததாக முதலில் அறிவிக்கப்பட்ட தகவல் தவறானது என்று நியூயோர்க் நகர மேயர் தெரிவித்திருக்கிறார்.

அந்த விமானத்தில் ஐந்து குழந்தைகளும் தங்கள் பெற்றோர்களின் மடியில் இருந்தது பின்னர் தெரியவந்திருக்கிறது.

இந்தக் குழந்தைகள் ஐவருடனும் சேர்த்து மொத்தம் 251 பயணிகள் அந்த விமானத்தில் பயணம் செய்தனர். (ஐ)

## பிந்திய செய்திகள்

★ ஆப்கானில் புதிய பிரதிநிதித்துவ அரசு ஒன்றை அமைக்க ஐ.நா. விரைந்து உதவிகளை வழங்கும் என்கிறார் செயலாளர் நாயகம் கோபி அனான்.

★ அவசர நிவாரண உதவிகளை தனது எல்லையூடாக ஆப்கானிஸ்தானுக்குள் கொண்டுசெல்ல உஸ்பெகிஸ்தான் அனுமதி.

★ எட்டு வெளிநாட்டுப் பிரஜைகள் மீதான வழக்கைத் தலிபான் கால வரையறையின்றி ஒத்திவைத்துள்ளது.

★ மஷார்-ஏ-ஷெரீப் நகரில் ஐ.நா.உணவுக் களஞ்சியம் ஒன்று இனந்தெரியாதோரால் கொள்ளை.

★ ஆப்கானிஸ்தானில் தனது படைகள் தரை நடவடிக்கையில் ஈடுபடுவதை பிரிட்டன் பகிரங்கமாக ஒப்புக்கொண்டது. (ஐ)

## தலைநகரில் தலிபான்கள் பின்வாங்கினர்

# வடக்குக் கூட்டணிப் படைகள் காபூல் நகருக்குள் நுழைந்தன!

காபூல்,நவ.14

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க ஆதரவுடன் தரையில் இடம்பெற்றுவரும் போரில் பெரும் திருப்பங்கள் நிகழ்ந்திருக்கின்றன.


வடக்குக் கூட்டணிப் படைகளின் சில சிறிய அணிகள் தலிபான்களின் முக்கிய கோட்டைகளில் ஒன்றான தலைநகர் காபூலுக்குள் நேற்றுக் காலை எதிர்ப்பின்றி நுழைந்துவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

நகரைப் பாதுகாத்து வந்த தலிபான் படையணிகள் நேற்றுமுன்தினம் இரவு வாக்கில் அங்கிருந்து பின்வாங்கத் தொடங்கியதாகக் கூறப்படுகிறது. எனினும் நகரில் ஆங்காங்கே வேட்டொலிகள் கேட்டவண்ணம் இருப்பதாகவும் -

மேலும் பெரும் எண்ணிக்கையான வடக்குக் கூட்டணிப் படைகள் நகரினுள் பிரவேசிக்கும் போது அங்கு பெரும் மோதல்கள் வெடிக்கலாம் என்று அஞ்சப்படுவதாகவும் -

சில ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. (ஐ)

காபூல் நகரினுள் எதிரணிப் படைச் சிப்பாய்



# டொமினிக்கன் குடியரசில் 3நாள்கள் துக்கம் அனுஷ்டிப்பு!

சந்தோ டொமிங்கோ,நவ.14

கரீபியன் தீவான டொமினிக்கன் குடியரசைச் சேர்ந்த 150 பயணிகள் அமெரிக்க விமான விபத்தில் உயிரிழந்துவிட்டதை அடுத்து அந்நாட்டில் மூன்று நாள்கள் துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது.



கணவனின் நிலை அறியத் துடிக்கும் பெண்

பலியான தங்கள் உறவினர்களின் சடலங்களை எதிர்பார்த்து நூற்றுக்கணக்கானவர்கள் தலைநகரில் வெளிநாட்டு அமைச்சு அலுவலகத்தில் திரண்டுள்ளனர்.

நியூயோர்க்கின் ஜோன் எவ் கெனடி விமான நிலையத்தில் இருந்து டொமினிக்கன் குடியரசின் தலைநகருக்குச் சென்று கொண்டிருந்த ஜெற் விமானமே வழியில் வீழ்ந்து நொறுங்கியது.

இந்த அனர்த்தம் குறித்து டொமினிக்கன் குடியரசின் அதிபர் ஹிபோலிட்டோ மெஜியா அதிர்ச்சியும் கவலையும் வெளியிட்டிருக்கிறார்.

செப்ரெம்பர் 11ஆம் திகதி நியூயோர்க்கின் உலக வர்த்தக மையக் கட்டடங்கள் மீது நடத்தப்பட்ட பேரழிவுத் தாக்குதலின் போதும் டொமினிக்கன் குடியரசுப் பிரஜைகள் 40 பேர் பலியாகினர். (ஐ)

# அடுத்த இலக்கு கந்தகார் நகரம் தீவிர பலப்பரீட்சை இனிமேல்தான்

இஸ்லாமாபாத்,நவ.14

தங்களின் கோட்டைகளில் ஒன்றாக விளங்கிய காபூல் நகரத்தைக் கைவிட்டு வெளியேறியுள்ள தலிபான்கள் அடுத்த வலுக்கோட்டையான கந்தகார் பகுதிக்குச் சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது.

கந்தகார் தலிபான்களின் கோட்பாட்டுத் தலைநகரமாகும். தலிபான் தலைவர் முல்லா முஹமட் ஒமரின் தலைமையகமும் 'அல்கெய்டா' அமைப்பின் தலைமையகமும் இந்த நகரிலேயே இயங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.



நேற்றுக்காலை எதிரணித் துருப்புக்கள் காபூல் நகரினுள் பிரவேசிக்க முன்பாகவே தலிபான்கள் தங்கள் வாகனங்கள், யுத்த தளபாடங்கள் மற்றும் உடைமைகளை எடுத்துக் கொண்டு அங்கிருந்துவெளியேறி விட்டனர். இதன் மூலம் அவர்கள் தங்களின் படையணிகளுக்கு உயிர்ச் சேதம் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொண்டுள்ளனர்.

எந்த எதிர்ப்பும் இன்றி காபூலைக் கைப்பற்றியதால் மிகுந்த உற்சாகம் அடைந்துள்ள வடக்குக் கூட்டணிப் படைகள் அங்கிருந்து கந்தகார் நோக்கி முன்னேற ஆயத்தமாகி வருகின்றன.

கந்தகார் விமான நிலையத்தை கூட்டணிப்படைகள் ஏற்கனவே கைப்பற்றிவிட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன. ஹெரட் நகரையும் கைப்பற்றியுள்ள கூட்டணிப்படைகள் கந்தகார் நோக்கிச் செல்லும் பிரதான நெடுஞ்சாலையின் நுழைவாயிலை நெருங்கி விட்டதாகவும் கூறப்படுகிறது.

தரைப்போரில் இனிமேல்தான் தீவிர பலப்பரீட்சை நடக்கப்போவதாக போரியல் நிபுணர்கள் எதிர்பார்க்கின்றனர்.

தலிபான்கள் தங்களின் கடைசிக் கோட்டையான கந்தகாரை இலகுவில் பறி கொடுத்துவிடமாட்டார்கள் என்றும் -

இதனால் இனிமேல் களத்தில் சண்டை மிகத் தீவிரமடையலாம் என்றும் - எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை -

காபூல் நகரம் தங்களால் கைவிடப்பட்டிருப்பதை தலிபான்கள் ஒப்புக் கொண்டிருப்பதாக செய்திகள் தெரிவித்தன. (ஐ)

# காபூல் மக்கள் பெரும் ஆரவாரம்! 'பாகிஸ்தான் ஒழிக' எனக் கோஷம்!!

## பி.பி.ஸி. செய்தியாளர் தகவல்

வடக்குக் கூட்டணிப் படைகளின் சிறிய அணிகள் நேற்றுமுன்தினம் முன்னிரவுவாக்கில் காபூல் நகரினுள் கால் நடையாகப் பிரவேசித்த சமயம் நகர மக்கள் பெரும் ஆரவாரம் செய்து அவர்களை வரவேற்றதாக பி.பி.ஸி. செய்தியாளர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

கும்பல் கும்பலாக வீதிக்கு வந்த மக்கள் 'பாகிஸ்தான் ஒழிக!' 'தலிபான் ஒழிக' என்று கோஷமிட்டதாக வடக்குக் கூட்டணிப் படைகளுடன் காபூல் நகரினுள் நுழைந்த பி.பி.ஸி. செய்தியாளரான ஜோன் சிம்ஸன் தெரிவித்தார். கூட்டணிப் படைகளின் டாங்கிகள் மீது சிலர் மலர்களை வீசியதாகவும் கூறப்படுகிறது.

எனினும் நகரின் சில பகுதிகளில் தலிபான் போராளிகள் இன்னமும் மறைந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

நகரில் உள்ள இன்ரகொன்ரினென்டல் ஹோட்டலுக்கு அருகே உள்ள பூங்காப் பகுதியில் கடும் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றிருக்கிறது. (ஐ)

# திடீரென எரிபொருளை விமானி கடலில் திறந்துவிட்டது ஏன்?

## பேரழிவைத் தடுக்க முயன்றாரா?

நியூயோர்க்,நவ.14

அமெரிக்க விமானம் வீழ்ந்து நொறுங்குவதற்குச் சிறிது நேரம் முன்பாக விமானத்தின் தாங்கியில் இருந்த எரிபொருளை விமானி கடல் மீது திறந்து வெளியேறவிட்டிருப்பது தெரியவந்திருக்கிறது.

ஜமேய்க்கா விரிகுடாவை விமானம் கடந்து கொண்டிருந்த சமயம் விமானி அதன் எரிபொருளை கடற்பகுதி மீது வெளியேற்றியிருக்கிறார்.

விமானம் வீழ்ந்து நொறுங்கப் போவதைத் தெரிந்துகொண்டதாலேயே தரையில் பேரழிவைத் தடுப்பதற்காக விமானி அவ்வாறு செய்திருக்க வேண்டும் என்பதால் இந்த அனர்த்தம் ஒரு விபத்துச் சம்பவம் என்பதை இது உறுதி செய்வதாக நியூயோர்க் நகர் ஆளுநர் ஜோர்ஜ் பற்றகி தெரிவித்திருக்கிறார். (ஐ)

# போராட்டத்தில் அதிஉன்னத நிலையில் உள்ள புலிகளுடன் பேசுவதன் மூலமே தீர்வுகாண முடியும்

## கூட்டணிச் செயலாளர் நாயகம் சம்பந்தன் கூறுகிறார்

கொழும்பு, நவ. 14

கடந்த 50 வருடங்களாக மாறி மாறி வரும் அரசுகளுடன் தமிழ் மக்களின் தலைவர்கள் பேச்சுக்களை நடத்தி, ஒப்பந்தங்கள் பலவற்றைச் செய்தனர். ஆனால் தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை. ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்து இன்று அதி உன்னத நிலையில் இருக்கும் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதன் முலம் தான் ஒரு தீர்வைக் காண முடியும் என்று நம்புகிறோம்.

— இப்படிக் கூறினார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் ஆர். சம்பந்தன்.


தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தை நேற்று முன்தினம் மாலை வெளியிட்டு வைத்து உரையாற்றிய போதே அவர் இப்படிக் கூறினார்.

'ஹொலிடே இன்ஸ்' ஹோட்டலில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:

தமிழர் விடுதலைக் கூட்டணியில் பல தமிழ்க் கட்சிகள் இணைந்து, மக்களின் ஆணையைப் பெற்றுத் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அந்த முயற்சிகள் பலன் அளிக்காத நிலையில் ஆயுதப் போராட்டம் ஆரம்பமாகியது. அந்தப் போராட்டத்தின் அதி உன்னத நிலையில் விடுதலைப் புலிகள் உள்ளனர்.

அவர்களுடன் பேச்சு நடத்தித் தீர்வு ஒன்று எட்டவேண்டும் என மக்கள் விரும்பினர். அதன் பயனாக நான்கு தமிழ்க் கட்சிகள் இணைந்து கூட்டமைப்பை உருவாக்கித் தேர்தலில் போட்டியிடுகின்றன.

தேர்தலின் பின்னரும் இந்தக் கூட்டமைப்பு இயங்கி, விடுதலை புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் பேச்சுக்கள் ஆரம்பமாக உள்நாட்டி



லும் சர்வதேச மட்டத்திலும் முயற்சிகளை மேற்கொள்ளும்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் ஆரம்பமாக உதவுவோம். ஆனால் பேச்சுக்களில் பங்காளிகளாக இருக்கமாட்டோம்.

அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா போன்ற நாடுகள் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு வற்புறுத்துகின்றன. ஆனால் இலங்கை அரசு இது விடயத்தில் பாராமுகமாக இருக்கின்றது.

கடந்த கால அரசுகள் விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்தன என்பது உண்மைதான். எதிர்காலத்தில் 3 ஆம் தரப்பின் உதவியுடன் பேச்சுக்கள் இடம் பெற விருப்பதால் அந்தப் பேச்சுக்கள் தோல்வியடையும் சாத்தியம் குறைவு.

நாட்டைப் பிரிக்காமல் ஒரு தீர்வைக் காணலாம் என நாம் நம்புகின்றோம். பேச்சுக்கு முன்னர் கொள்கைத் திட்டம் ஒன்றை வகுக்க வேண்டும். அதன் அடிப்படையில் பேச்சைச் சுமுகமாக முன்னெடுத்துச் செல்ல முடியும்.

பழைய வரலாறுகளை மறந்து புதிய சிந்தனைகளுடன் தமிழ்மக்களுக்கு தீர்வு ஒன்றுக்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் — என்றார் அவர். (ஜ-3)


கைதடி வணிகர் கழக அங்கத்தவர்களுக்கு

## முக்கிய அறிவித்தல்

மாண்புமிகு அமைச்சர்

கே. என். டக்ளஸ் தேவானந்தா

அவர்கள் எமது கழக அங்கத்தவர்களுடன் கொடுப்பனவு சம்பந்தமாகக் கலந்துரையாடவிருப்பதால் நாளை (15—11—2001) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அமைச்சு அலுவலகத்துக்கு அங்கத்தவர்களை சமுகந்தருமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

வணிகர் கழகம்,
கைதடி. (94504)

க. பரமேஸ்வரன்
செயலாளர்.


## மரண அறிவித்தல்கள்

### கந்தையா பொன்னையா

(பேராலை, பனை)

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் பேராலை, பளையை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது உரும்பிராய் கிழக்கில் வசித்தவரான கந்தையா பொன்னையா 12-11-2001 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லமுத்து அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் இராஜேஸ்வரி (ஜேர்மனி), சிறிஜெயம் (வன்னி), ஆனந்த ஈஸ்வரி (ஆசிரியை,சோரன் மற்றும் CCTM,பாடசாலை), ஆகியோரின் அன்புத் தந்தையாரும் கோவிந்தன், இரத்தினசிங்கம், இராசரத்தினம் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (13-11-2001) செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு உரும்பிராய் இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (94511)

செ. இராசரத்தினம்.
(மருமகன்)

### திருமதி ஆறுமுகம் சிதம்பரம்

தையிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி ஆறுமுகம் சிதம்பரம் அவர்கள் 12.11.2001 திங்கட்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசிங்கர் ஆறுமுகம் அவர்களின் அன்பு மனைவியும் மற்றும் தவமணி (கொழும்பு), வேலாயுதம் (இ. போ. ச. வவுனியா), செல்வராணி (மருந்தாளர், யாழ். போதனாவைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தணிகாசலம், காலஞ்சென்ற பராசக்தி மற்றும் பாலசிங்கம் (உதவிக் கல்விப் பணிப்பாளர் – வலிகாமம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சிவாஜினி, சிறிகரன், (சுவிஸ்), தயாபரன் (சுவிஸ்), சிவஞானகினி, (சுவிஸ்), மாலினி (கனடா), சுதாயினி (கொழும்பு), சுதர்சினி (இந்தியா), ஜசிகரன், மேகலா, கிரிதேவி, சஜேநசன், நரேந்திரன், தர்சன், நிசாகன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (13.11.2001) வவுனியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:—

மகள் செல்வராணி,
பேர்த்தி சிவாஜினி.

பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். (94483)

## கண்ணாடி வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 14

இணுவில் லயன்ஸ் கழகம் நடத்தும் இலவசக் கண்ணாடி வழங்கும் நிகழ்வும், 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களுக்கான பாராட்டு விழாவும் இன்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிராந்தியம் 9 இன் தலைவர் லயன் ஆர். நடராசா, பிராந்தியம்9 வலயம்1 இன் தலைவர் லயன் கே. தேவராசா, உடுவில் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் லயன் ஏ. தற்பரானந்தன் ஆகியோர் கலந்துகொண்டு பரிசில்களை வழங்குவர். (ஜ-தி)

## பக்தி எழுச்சிப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், நவ. 14

இந்து சமயப் பேரவையின் ஏற்பாட்டில் நாட்டில் சாந்தி, சமாதானம், அமைதி ஏற்பட வேண்டி பக்தி எழுச்சிப் பிரார்த்தனை இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறும்.

விசேட பூஜை வழிபாடுகளும், தெய்விக இசை ஆராதனையும் இடம்பெறும். (ஜ-ரி)

## காரைநகரில் பழுதடைந்த உணவு விற்பனை

காரைநகர் பகுதியில் உள்ள சில வர்த்தக நிலையங்களில் பாவனைக்காலம் முடிவடைந்த உணவுப் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதாக மக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

பால்மா வகை, பிஸ்கற் வகைகள் உட்பட பல உணவுப் பொருள்கள் பாவனைக்காலத் திகதி முடிவடைந்த நிலையில் விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக சுகாதாரப் பகுதியினர் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என மக்கள் குறை கூறுகின்றனர். (ஜ-73)

## விடைத்தாள் மதிப்பிடும்பணி திகதி மாற்றம்

யாழ்ப்பாணம், நவ. 14

தீவக வலயக் கல்விப் பாடசாலைகளில் அண்மையில் நடைபெற்ற தரம் 9 இற்கான மாகாண மட்டப் பரீட்சையின் விடைத்தாள்களை மதிப்பிடும் பணிகளுக்கான திகதிகள் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய திகதிகள் வருமாறு:-

★ சங்கீதம், சமூகக்கல்வி— 15, 16 ஆம் திகதிகள்.

★ கிறிஸ்தவம் (றோ.க.)— 16, 17 ஆம் திகதிகள்.

★ விஞ்ஞானம், தமிழ், சைவசமயம்—19,20 ஆம் திகதிகள்.

★ ஆங்கிலம்—23,24 திகதிகள்.

இந்தத் திகதிகளிலேயே மேற்படி மதிப்பிடும் பணிகள் இடம்பெறவுள்ளன. (ஜ-10)


## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம் வரவு செலவுத்திட்டம் - 2002

2002 ஆம் ஆண்டுக்கு கிடைக்கக்கூடிய மாநகர வருமான மதிப்பீட்டையும், உத்தேச செலவின விவரங்களையும் உள்ளடக்கிய யாழ். மாநகராட்சி மன்றத்தின் வரவு செலவுத் திட்டம் 2001 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் ஏழு நாள்களுக்கு மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்படுமென மாநகராட்சி மன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தி. 252). (212) பி பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

இ. இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்.

மாநகரசபை,
யாழ்ப்பாணம். (சி/19294)



## சீட்டிழுப்பும் கண்சிகிச்சை முகாமும்

வடமராட்சி லயன்ஸ்கழகத்தினால்

இன்று (14—11—2001) புதன்கிழமை நடத்தப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டு எதிர்வரும் 25—11—2001 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில்வைத்து அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.

அன்றையதினம் மேற்படி வித்தியாலயத்தில் கண் சிகிச்சை, நீரிழிவு, பொது சுகாதார வைத்திய முகாம் என்பன நடத்தப்படும் என்பதைச் சகலருக்கும் அறியத் தருகின்றோம்.

செயலாளர், தலைவர்.
வடமராட்சி லயன்ஸ் கழகம்.

(94498)


## கூடைப்பந்தாட்ட புதிய ஆடுகளம்

கோப்பாய், நவ. 14

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் புதிதாகக் கூடைப்பந்தாட்ட ஆடுகளம் அமைக்கப்பட்டுள்ளது.

இதனை அமைப்பதற்கான பெருமளவு நிதியை (சுமார் 3½ லட்சம் ரூபா) கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-72)

## தீயால் படுகாயம்

குப்பிவிளக்கை எடுக்க முற்பட்ட சமயம் அது தவறி உடலின் மீது விழுந்து தீப்பிடித்ததால் இரு குழந்தைகளின் தாயார் ஒருவர் படுகாயமடைந்தார்.

உடுப்பிட்டி சந்நிதி வீதியைச் சேர்ந்த சந்திரகுமார் அபிதா (வயது 24) என்ற பெண்ணே தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனாவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ச-6)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ. 14

கொக்குவில் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு அதிபர் நா. ஜெயனொளிபவன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க. மணிபல்லவராஜனும் சிறப்பு விருந்தினராக நல்லூர் கல்விக்கோட்டப் பணிப்பாளர் திருமதி ச. காங்கேயனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஜ-10)

## வாராந்த நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 14

சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை, பண்பாடுப் பேரவையினர் சந்நிதியின் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த வெள்ளி நிகழ்வில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை 'குருதத்துவம்' எனும் பொருளில சிவயோகராணி கதிரவேலுவின் சொற்பொழிவு இடம் பெவுள்ளது. (ஜ-10)

உதயன்

## தீபாவளித் திருநாளில் நமது தீர்மானம்

இன்று தீபாவளித் திருநாள். இயற்கையோடு இணைந்து வாழ்ந்த இந்துக்களின் இனிய திருநாள்களுள் இதுவும் ஒன்று.

விழாக்கள் பல கண்டு, விருந்துண்டு, கூடி மகிழ்ந்து, இன்புற்று வாழ்ந்த இந்துக்களின் பண்டிகைகள் வரிசையில் தீபாவளிக்கும் முக்கிய இடமுண்டு.

வையத்தை வருத்திய நரகாசுரனை கிருஷ்ண பரமாத்மா, வதம் செய்த தினம் இந்நாள்தான்.

அந்த வகையில் அதர்மம் அழிக்கப்பட்டு தர்மம் நிலைநாட்டப்பட்ட தினமும் இன்றாகும். மக்களின் வாழ்வில் நரகாசுரன் என்ற அரக்கன் ஏற்படுத்திய இருளை, அவனை சம்ஹாரம் செய்ததன் மூலம் இறைவன் அகற்றி, அவர்களின் வாழ்வில் ஒளியை ஏற்றிய திருநாள் என்பதால் இது - ஒளியை வணங்கும்- தீபத் திருநாளாகின்றது.

சமூக வாழ்வையும், அமைதியையும், நல்லுறவையும் கெடுக்கும் பெருங்கேடாக நம்மத்தியிலே இன்று அதர்மம் தலைவிரித்தாடுகின்றது. பேரினவாதம் என்ற அசுரன் தமிழர்களாகிய மக்களை வேட்டையாடி, சொல்லொணாத் துன்பத்தில் ஆழ்த்தி, அவர்களின சுதந்திரத்தைப் பறித்து, அவர்களை அடிமைகளாக்கி, கொடுங்கோலாட்சி புரிந்துகொண்டிருக்கின்றான்.

நரகாசுரனின் பிடியிலிருந்து விடுதலை கிடைக்காதா என்று அன்றைய மக்கள் ஏங்கித் தவித்தது போல -

இந்தப் பேரினவாத அசுரனின் பிடியிலிருந்து விடுதலை கிடைக்காதா என்று நம் தமிழர் இன்று ஏங்கித் தவித்துக்கொண்டிருக்கின்றனர்.

அன்றைய கிருஷ்ண பரமாத்மா நரகாசுரனை சம்ஹாரம் செய்தது போல இன்றைய கிருஷ்ண பரமாத்மா பேரினவாதத்தை சம்ஹாரம் செய்வது எப்போது என்பது தான் ஈழத்தமிழர்களின் மனதில் ஏக்கமாக - கேள்வியாக - தொக்கி நிற்கின்றது.

அந்த விடிவுநாளை - ஒளி பிறக்கும் திருநாளை - ஈழத் தமிழர்கள் ஆவலோடு பார்த்துக் காத்திருக்கின்றார்கள்.

பிரமாவின் வரம் பெற்று வந்த தால நரகாசுரன் வலிமை மிகுந்தவனாக இருந்தான். தனது வலிமையினால் மக்களை வலிக்கு உட்படுத்தினான். விளைவு.... அவன் ஆட்சி வழியில் ஒழிந்தது.

இங்கும் சில நரகாசுரர்கள் வலிமைபெற்று வந்திருக்கின்றார்கள். அதனால் வலி தரும் ஆட்சி நீடிக்கின்றது.

"தர்மத்தின் வாழ்வுதன்னைச் சூது கவ்வும். ஆனால் தர்மம் மீண்டும் ஒருநாள் வெல்லும்" - என்ற மொழிக்கு இணங்க எம்மை அதர்மம் சூழ்ந்து கவ்வி நிற்க, எங்களை விட்டு விலகிச் சென்றிருக்கும் தர்மம் மீண்டும் வரும்; விரைவில் வரும்; அது வெல்லும் - என்ற நம்பிக்கையோடு ஈழத்தமிழ் மக்கள் - குறிப்பாகக் குடாநாட்டு மக்கள் - வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கின்றார்கள்.

அந்த தர்மத்தை வரவேற்கும் தர்ம வழியில் நாம் நிற்கின்றோமா என்பதுதான் இந்தத் தீபாவளித் திருநாளில் நம்மை நாமே கேட்க வேண்டிய கேள்வியாகும்.

இழந்த உரிமைகளை, சுதந்திரத்தைப் பெறுவதற்காக - அடிமை வாழ்விலிருந்து விடுதலை அடைவதற்காக - நினைத்தே பார்க்கமுடியாத பல்வேறு தியாகங்களைச் செய்து போராடிக் கொண்டிருக்கும் நம்மினத்தை, அற்ப சொற்ப சலுகைகள் என்ற லஞ்சங்களுக்காகக் காட்டிக்கொடுத்து, அதர்மத்துக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கும் பணியை நாம் தொடரத்தான் வேண்டுமா என்பதை இந்தத் தீபத் திருநாளில் நாம் தீர்மானித்துக் கொள்வோம்.

மிகவிரைவில் இன்னொரு தீபச் சுடர் ஏற்றும் திருநாளும் எமக்கு வருகின்றது. அதையும் நினைவில் நிறுத்தி, எமது இனத்துக்குச் செய்ய வேண்டிய நமது கடமையை அதை அடுத்து, வரும் வாரம் கழிய நிறைவேற்றுவோம்!



மருதனார்மடத்தில் மறியறபோரில் ஈடுபட்டிருக்கும் லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்களை வலிகாமம் தெற்கு பிரதேச சபைத் தலைவர் க.கமலசேகரன் நேற்றுமுன்தினம் சந்தித்து உரையாடியபோது எடுக்கப்பட்ட படம். (ஐ-152)

# ஆறு அரசியல்வாதிகளுக்கு அதிரடிப்படை பாதுகாப்பு!

தேர்தலையொட்டி ஆறு அரசியல்வாதிகளுக்கு விசேட பொலீஸ் அதிரடிப்படையின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

முன்னாள் சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கா, அமைச்சர் மங்கள சமரவீர, அமைச்சர் பேரியல் அஷ்ரப், முன்னாள் பிரதியமைச்சர்களான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, எஸ். கணேசமூர்த்தி, டி.எம்.தஸநாயக்க ஆகியோருக்கே இப்பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் விடுத்த கோரிக்கையின் பேரிலேயே விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக பிரதிப் பொலீஸ் மா அதிபர் குணதிலக தெரிவித்தார். (ஐ-4)

### நகரில் சனத்திரள்

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு யாழ்.நகரில் நேற்றும் நேற்று முன்தினமும் சன நெரிசல் அதிகரித்துக் காணப்பட்டது. தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடும் முகமாக மக்கள் உடுபுடைவைகளைக் கொள்வனவு செய்யப் பெரும் எண்ணிக்கையில் நகருக்கு வந்ததால் நகரின் வீதிகள், நவீன சந்தைப் பகுதி என்பன ஒரே சனக் கூட்டமாகக் காணப்பட்டது. (ஐ-17)

## நாட்டு நடப்பு

### பொலிவுறும் அடுத்த ஆண்டு

வந்ததோ பல தீபாவளி
வாங்கினோம் பல புடைவை
என்னதான் செய்து என்ன
இதயமோ மகிழ்ந்ததில்லை
என்பதை மனதில் எண்ணி
இறைஞ்சினேன் விநாயகனை வேண்டி
பொன்னெடும் துதிக்கை தூக்கிப்
பொலிவுற கணபதி யாரும்
"வண்ணமுற தமிழர்"வாழ
வளம்பெறும் அடுத்த தீபாவளியே" என்றார்
நன்மைகள் பூத்து நிற்க
நலம் பெறும் அடுத்த ஆண்டு
என்ற அச்சேதி கேட்டேன்
இதன் பலனை இருந்து பார்ப்போம்.

*- விகடகவி.*

### யுத்தத்துக்கு முடிவுகட்ட பிரதான கட்சிகள் தயாரா?

# தேர்தலைப் பகிஷ்கரிக்கப் போவதாக படையினரின் உறவினர் சங்கம் அறிவிப்பு

கொழும்பு,நவ.14

நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்தும் விடயத்தில் இரு பிரதான கட்சிகளும் தமது நிலைப்பாட்டைத் தேர்தலுக்கு முன்னா தெளிவுபடுத்தாவிட்டால், தேர்தலை நிராகரிக்குமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொள்வதுடன் தேர்தலை நிறுத்தும்வகையில் நாடளாவிய போராட்டங்களும் நடத்தப்படும்.

- இப்படி எச்சரித்திருக்கின்றது போர்முனையில் காணாமற்போன படையினரின் பாதுகாவலர் சங்கம்.

பதவிக்குவரும் அனைத்துக் கட்சிகளும் போரைத் தீவிரப்படுத்தி, நாட்டை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்கின்றன.

இந்தப் போரினால் இருதரப்பிலும் தினமும் பலர் கொல்லப்பட்டு வருகின்றனர்; மேலும் பலர் காணாமற் போகின்றார்கள்.

எனவே, தொடரும் இந்தப் போரை முடிவுக்குக்கொண்டு வந்து, நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் உருவாக்கப்போவதாக மக்களுக்கு எந்தக் கட்சி உறுதி வழங்குகிறதோ அந்தக் கட்சியையே நாம் ஆதரிப்போம்.

- இவ்வாறு சங்கம் நேற்று முன்தினம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

### புதிய தலைவர் தெரிவு

வடமராட்சி,நவ.14

அறவழிப் போராட்டக் குழுவின் புதிய தலைவராக டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதன் தலைவராக இருந்த வி. ஜி.தங்கவேல் எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழர் கூட்டமைப்பின் வேட்பாளராகப் போட்டியிடுவதால் தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

இதனையடுத்து நடைபெற்ற விசேட கூட்டத்தில் டாக்டர் அருளானந்தன் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ஐ-173)

### சிறுவன் மரணம்

தென்மராட்சி,நவ.14

வயிற்றுக்குத்து ஏற்பட்டதாகக் கூறி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட 14வயதுச் சிறுவன் மரணமானார். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் மந்திகையில் இடம்பெற்றது.

மிருசுவில் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வல்வெட்டித்துறை வேம்படியில் தங்கியிருந்த கிட்டினன் தவச்சந்திரன் என்பவரே மரணமானவராவார். (ஐ-117)

# கிழக்கில் புலிகளின் பகுதிகளுக்கு உழவு இயந்திரங்கள் செல்லத் தடை!

## நெல் விதைப்பு வேலைகள் பாதிப்பு

செங்கலடி,நவ.14

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களுக்கு உழவு இயந்திரங்கள் கொண்டுசெல்ல கடந்த ஞாயிறு முதல் படையினர் தடைவிதித்துள்ளனர்.

செங்கலடி, கறுப்புப்பாலம், வந்தாறுமூலை, உப்போடை வீதி, சித்தாண்டி, சந்தணமடு வீதி, கிரான் பாலத்தடி வீதி ஆகியன ஊடாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள வயல் நிலங்களில் விதைப்பு வேலைகளை மேற்கொளள உழவு இயந்திரங்கள் கொண்டு செல்லப்பட்டன. ஆனால் அவை படையினரால் திருப்பி அனுப்பப்பட்டன.

விடுதலைப் புலிகளின் மாவீரர் தினம் எதிர்வரும் 27 ஆம் திகதி முடிவடைந்த பின்னரே உழவு இயந்திரங்கள் செல்ல அனுமதிக்க முடியும் என்று படையினர் அறிவித்ததாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

படையினரின் தடை உத்தரவால் ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்களில் விதைப்பு வேலை செய்ய முடியாது உள்ளது என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (ஐ-3-4)

# காணாமற்போனோரில் எவராவது சிறையில் இருந்தால் தெரிவிப்போம்!

## விவரம் தரக் கோருகிறார் ஆணையாளர்

யாழ்ப்பாணம்,நவ.14

குடாநாட்டில் காணாமற்போனவர்களின் பெயர் விவரங்களைத் தந்தால் அவர்களில் எவராவது நாட்டில் உள்ள சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனரா என்பதை அறிய ஏற்பாடு செய்வோம்.

மத்திய சிறைச்சாலை ஆணையாளர் ஈ.ஏ. ஆரியசேன இவ்வாறு தெரிவித்தார்.

மக்கள் குறைநிவர்த்தி சேவையில் பங்குபற்றுவதற்காக யாழ்ப்பாணம் வருகை தந்த சமயம் அவர் உதயன் செய்தியாளரிடம் இதனைத் தெரிவித்தார்.

காணாமற்போனவர்களுக்கு என்ன நடந்தது என்பது எமக்குத் தெரியாது. ஆனால் அவர்களில் எவராவது சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனரா என்பதை எங்களால் உறுதி செய்ய முடியும். காணாமற்போனோரின் பாதுகாவலர்கள் சில விவரங்களைத் தந்தால் அத்தகையோரை சிறைகளில் தேடிக்கண்டுபிடிக்க உதவியாக இருக்கும் என்றும் அவர் கூறினார். (ஐ-180)

# புலோலி வாசி விடுதலை

தென்மராட்சி,நவ.14

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கடந்த 1999ஆம் ஆண்டு படையினரால் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த புலோலி தெற்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவலிங்கம் என்பவர் நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்ற நீதிவானால் விடுதலை செய்யப்பட்டார்.

அநுராதபுரம், திருகோணமலை ஆகிய சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்து, அண்மையில் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்ட இவர் சட்டமா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய விடுதலை செய்யப்பட்டார். (ஐ-117)

### நாளை

ஐப்பசி 29
வியாழக்கிழமை
திதி : அமாவாசை
பிற்பகல் 1.16 வரை.
நட்சத்திரம் : விசாகம்
முன் இரவு 9.02 வரை.
சுபநேரம் : 7.37 - 9.07
ராகுகாலம் : 1.37 - 3.07
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

திறமையும் அவசியமும் ஒன்றுக்கொன்று பக்கத்தில் வாழ்கின்றன.

# ஏறாவூர் தாக்குதலில் புலிகள் மீட்ட ஆயுதங்கள்

மட்டக்களப்பு,நவ.14

மட்டக்களப்பு ஏறாவூர் பொலீஸ் காவலரண மீது கடந்த சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விவரங்களை 'புலிகளின் குரல்' வானொலி நேற்றுமுன்தினம் இரவு வெளியிட்டது.

அவற்றின் விவரம் வருமாறு:-

- ★ 60 மி.மீ.மோட்டார் - 01
- ★ 40 மி.மீ.எறிகணைச் செலுத்தி - 01
- ★ ஏ.கே.எஸ்.எம்.ஜி. - 01
- ★ ரி56 ரகத் துப்பாக்கி - 01
- ★ 60 மி.மீ.எறிகணைகள் - 64
- ★ 40 மி.மீ.எறிகணைகள் - 06
- ★ கைக்குண்டுகள் - 04
- ★ நடுத்தர ரவைகள் - 500

இதேவேளை - மட்டக்களப்பு மாவட்டம் பாலமீன்மடு கிராமத்தில் அமைந்திருந்த பொலீஸ் காவலரண் மீது கடந்த சனிக்கிழமை இரவு விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

- ★ 60மி.மீ.மோட்டார் - 01
- ★ ஏ.கே.எஸ்.எம்.ஜி. - 01
- ★ ஆர்.பி.ஜி. - 01
- ★ ஆர்பி.ஜி.எறிகணைகள் - 10
- ★ நடுத்தர ரவைகள் - 675
- ★ தொலைத்தொடர்பு சாதனம் - 01
- ★ 40 மி.மீ.எறிகணை செலுத்தி - 01
- ★ ரி56 ரகத் துப்பாக்கி - 01
- ★ கைக்குண்டுகள் - 07
- ★ ஒளிர்வுக்குண்டுகள் - 02
- ★ 3.8 கைத்துப்பாக்கி - 01
- ★ றொக்கட் ரவைக் குண்டுத் தாங்கி - 01

(ஐ-4)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

### 14-11-2001

HAPPY BIRTHDAY



யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜெனற்ஸ் - றெஜினீற்றா தம்பதிகளின் செல்வப் புதல்வி

### செல்வி ஜெனுஷா

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (14. 11. 2001) புதன்கிழமை பிரான்ஸில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். ஜெனுஷாவை அப்பா, அம்மா, யாழ். மத்தியூஸ் வீதியில் வசிக்கும் தேவதாஸ் (தாத்தா), அம்மம்மா, ராயு மாமா குடும்பத்தினர், யான்சன் மாமா குடும்பத்தினர், சுரேஸ் மாமா குடும்பத்தினர், செபஸ்ரியன் மாமா, செலின்ரன் மாமா, லதா சித்தி, றெஜி குடும்பத்தினர், டிலோ சித்தி மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் மத்தியூஸ் வீதி புனித அந்தோனியாரின் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*16/6, மத்தியூஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

யோ.தேவதாஸ்
(தாத்தா குடும்பம்)
(கட்டட ஒப்பந்தகாரர்) (94471)

## UNIVERSITY OF JAFFNA
## SRI LANKA
# VACANCIES

University of Jaffna will entertain applications from suitably qualified persons upto 31.12.2001 for the undermentioned posts.

### FACULTY OF AGRICULTURE

1. Senior Lecturer Grade I/ Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in Agronomy/ Agricultural Biology

### FACULTY OF ARTS

2. Senior Lecturer Grade I/ Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in Carnatic Music (Vocal/Veena)/ Dance (Bharathanatyam/Art and Design)/ Hindu Philosophy/ Sociology.
   Those who are possessing a degree with specialization in Philosophy/ Hindu Civilization with Post Graduate Qualification in Saiva Siddantham will be considered for Post of Senior Lecturer / Lecturer (Probationary) in Hindu Philosophy.
3. Assistant Lecturer (On Contract) / Demostrator (on contract) in Siddha Medicine

| Post | Salary Code & Salary Scale | |
|---|---|---|
| Senior Lecturer Grade I | B-03(a) | Rs.21,500-8x475-25,300p.m. |
| Senior Lecturer Grade II | B-03 | Rs.18,325-5x475-20,700p.m. |
| Lecturer (Probationary) | B-04 | Rs.11,820-10x375-15,570p.m. |
| Assistant Lecturer (On Contract) | B-05 | Rs.10,800p.m. (Fixed) |
| Demonstrator (On Contract) | B-03 | Rs.9,000 p.m. (Fixed) |

Application forms and other details may be obtained from the office of the Assistant Registrar / Establishments, University of Jaffna, Sri Lanka either in person or by sending a Money Order for Rs.20/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the bursar, University of Jaffna together with a self addressed stamped envelope 23x10cm in size.

Applicants from the University System / Government Departments / Corporations and Statutory Boards should channel their applications through the Head of respective Institutions.

Applications received after the closing date will be rejected without intimation.

**REGISTRAR**
University of Jaffna,
Sri Lanka.
12 th November 2001 (C/19289)

## நுளம்பு வலைகளுக்கு மருந்து

துன்னாலை பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவில் நுளம்பு வலைகளுக்கு பேமத்திரின் மருந்து தோய்க்கும் பணி நாளை வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் துன்னாலை தாமரைக் குளத்தடியில் உள்ள குடும்பநல சேவையாளர் அலுவலகத்தில் நடைபெறும்.

இதுவரை நுளம்பு வலைகளுககு மருந்து தோய்க்காதவர்கள் இச்சேவையைப் பயன்படுத்துமாறு துன்னாலை பொது சுகாதாரப் பரிசோதகர் கேட்டுள்ளார். (க-117)

## கிளினிக் கட்டடம்

வடமராட்சி,நவ.14

வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் 15 லட்சம் ரூபா செலவில் கிளினிக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

இக்கட்டடம் அமைப்பதற்கான நிதியை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம் வழங்கியுள்ளது. (ஐ-173)

## பாடசாலைக்கு தொலைபேசி இணைப்பு

வடமராட்சி,நவ.14

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இணைப்பு வழங்குவதற்கான நிதியை வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒதுக்கீடு செய்திருந்தார். (ஐ-173)

## தொண்டமனாறு வெளிக்கள நிலைய பரீட்சை

அச்சுவேலி, நவ.14

தொண்டமனாறு வெளிக்கள நிலையம் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு மாவட்ட ரீதியில் நடத்தும் பரீட்சைகள் இம்மாதம் 19ஆம் திகதி ஆரம்பமாகி 28ஆம் திகதி வரை நடைபெறும்.

யாழ்மாவட்டத்தில் உள்ள ஐந்து கல்வி வலயங்களிலும் உள்ள பாடசாலைகளின் வசதியைக் கருத்திற்கொண்டு 8 இணைப்பு நிலையங்கள் ஊடாக வினாத்தாள்கள் விநியோகிக்கப்படவுள்ளன. பரீட்சைக்கான ஏற்பாடுகளை பரீட்சைச்சபை இணைப்பாளர் நா.உலகநாதன் மேற்கொண்டுள்ளார். (ஐ-11)

## மீனவரின் வலைகள் வெட்டி அழிப்பு

தென்மராட்சி,நவ.14

வியாபாரி மூலை, சக்கோட்டை ஆகிய கடற்பகுதியில் படையினரால அனுமதிக்கப்பட்ட பகுதிக்கு அப்பால போடப்பட்டிருந்த வலைகள் கடலில் வைத்து வெட்டிச் சேதப்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கடந்த சனி, ஞாயிறு தினங்களில இச்சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

இச்சம்பவம் தொடர்பாக இப்பகுதி மீனவர்கள் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடந்த வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் பருத்தித்துறை முனைப் பகுதி கடலிலும் இவ்வாறு வலைகள் வெட்டப்பட்டமை தெரிந்ததே.(ஐ-117)

## மகளிர்தின விழா

யாழ்ப்பாணம்,நவ.14

யாழ்ப்பாணம் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தின் மகளிர்தின விழா எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு திருநெல்வேலி சேர் பொன். இராமநாதன் வீதியில் உள்ள அதன் நிலையத்தில் ஆரம்பமாகித் தொடர்ந்து மாலை 4.00 மணிவரை நடைபெறவுள்ளது. (ஐ-10)

## செயலகத்தில் 22 நிலையங்கள்

யாழ்ப்பாணம்,நவ.14

டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கு யாழ்.மாவட்டத்தில் வாக்குகளை எண்ணுவதற்கென யாழ். செயலகத்தில் 22 வாக்கு எண்ணும் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

வாக்களிப்பு நிலையங்களில் இருந்து வந்து சேரும் வாக்குகளை எண்ணுவதற்கு 21 வாக்கெண்ணும் நிலையங்களும் தபால் மூல வாக்குகளை எண்ணுவதற்கு ஒரு நிலையமும் அமைக்கப்படவுள்ளதாக தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-10)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 1930 - 04 - 02



பிறப்பு 2001 - 10 - 15

**அமரர் தாமோதரம்பிள்ளை ரஞ்சன்** (செல்லச்சாமி)
[இளைப்பாறிய (இ.போ.ச) சாரதியும், பிரபல ஜவுளிக்கடை வர்த்தகரும்]

அன்பும் பண்பும் நிறைந்த உங்களை மறக்க முடியுமா?
ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

*புகையிரத வீதி,*
*சுன்னாகம்.*

*பிரிவால் துயருறும்:*
மனைவி - நல்லம்மா, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். (94291)

## நெஞ்சம் சுமக்கும் நான்காம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 22 - 10 - 1945



உதிர்வு 29 - 10 - 1997

**அமரர் நாகரத்தினம் செல்வரத்தினம்**
B.Sc. (Eng.), Hon, M.Eng.Sc.(Australia), M.I.C.E (London), M.I.E. (Srilanka)
(முன்னாள் வடமாகாணப் பணிப்பாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை)

*திதி: 14-11-2001*

குடும்பத்தின் குலவிளக்காய்
குலவலயம் போற்ற வாழ்ந்த
எம் அன்புத் தந்தையே!
காலத்தால் அழியாக் காவியமாகி
நேசத்தில் எல்லாமாய் நிறைந்து
பாசப்பிணைப்புடன் எம்மை
வழி நடத்தி வாழ்விக்கும்
உங்கள் நினைவுகள் காலங்கள்
நகர்வதால் மறந்திடல் இல்லை!
என்றும் பசுமையாய் எம்
நெஞ்சம் சுமக்கும் நினைவுகளாகும்!

*40/3, புகையிரதப்பாதை,*
*கிழக்கு ஒழுங்கை,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.* (94455)

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
**மனைவி, பிள்ளைகள்.**

## ஓராம் ஆண்டு நினைவலைகள்

மண்ணவர் மடிழ 08 - 01 - 1960



விண்ணவர் வாழ்வில் 25 - 10 - 2000

### அமரர் கந்தப்பு தவராஜா

திதி.14.11.2001

ஓர் ஆண்டு கடந்தனவே
ஆறவில்லை எமது துயர்
அகலவில்லை உங்கள் நினைவு
தேடற்கரிய பொக்கிஷமே
எமது உயிர் கலந்த தெள் அமுதே!
உம்மைப் பிரிந்த துயரத்தில்
கலங்குகின்றோம்.

*கரவெட்டி மத்தி,*
*கரவெட்டி.* (C/19292)

உங்களை இழந்து துயருறும்:
**மனைவி, பிள்ளைகள்.**

# அடர்ந்த காட்டின் வழியே நீண்ட நடையில் பிரபாவின் முகாமுக்குத் தரைவழிப் பயணம்

## பாலாவை பல்லக்கில் வைத்துத் தூக்கிச் சென்றனர் போராளிகள்

**விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் துணைவியாரான அடேல் பாலசிங்கத்தின் 'சுதந்திர வேட்கை' என்னும் ஆங்கில நூலின் மொழிபெயர்ப்புத் தொடர் இது.**

### காட்டுக்குள் சந்திப்பு

காட்டுக்குள் பிரபாகரனைச் சந்திக்கச் சென்றது எங்களுக்கு நல்லதோர் அனுபவம் ஆகும்.

1989ஆம் ஆண்டு மே மாதம் 30ஆம் திகதி பிரபாகரனுடன் கலந்தாலோசனை செய்வதற்காக இலங்கை விமானப்படை ஹெலிக்கொப்டரில் பாலா, நான், யோகி, மூர்த்தி, ஜுட் ஆகியோர் மெய்ப்பாதுகாவலர்களுடன் வன்னிக்கு அழைத்துச் செல்லப்பட்டோம்.

1987ஆம் ஆண்டில் இந்தியப் படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் போர் மூண்ட பின்னர் எங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பற்றிக் கருத்துப் பரிமாறிக் கொள்வது முக்கியமாக இருந்தது.

போராளி நண்பர்களுடன் மீண்டும் நட்பைப் புதுப்பித்துக் கொள்வதுடன் பிரபாகரனையும் சந்திக்கப் போகின்றோம் என்ற ஆவலும் எங்களுக்கு இருந்தது.

நாங்கள் சென்று கொண்டிருக்கும் "வண் ∴போர் தளம்" பிரபாகரனுடைய தலைமையகம். இந்தப் பகுதியிலுள்ள முகாம்கள் மீது இந்தியப் படைகள் தொடர்ச்சியாகப் பல தாக்குதல்களை நடத்தியிருந்தன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் "ஒப்பரேஷன் பவான்" என்ற படை நடவடிக்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்தொழிக்கும் முயற்சி தோல்வியடைந்தது. அதன் பின்னர் வன்னிக்காட்டில் விடுதலைப்புலிகளின முகாம்கள் மீது கவனத்தைத் திருப்பிய இந்திய இராணுவம் வன்னிப் பகுதியை இரத்த ஆறு பாயும் கொடூமான போர்க்களமாக மாற்றியிருந்தது.

விடுதலைப்புலிக் கெரில்லாப் போரா வீரர்களையும் அதன் தலைமையையும் சுத்தமாக அழித்தொழிப்பதற்கு பல வியூகம் வகுத்து இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்த இராணுவ நடவடிக்கைகளில புதிதுபுதிதாக ஆயிரமாயிரம் இந்தியத் துருப்புக்கள் ஈடுபடுத்தப்பட்டனர். தீவிரவாத எதிர்ப்பில் விசேட பயிற்சி



பெற்ற கொமாண்டோப் படையும் இந்த நடவடிக்கையில் இணைக்கப்பட்டிருந்தது.

படை நகர்வுக்கும் எதிர்த்துத் தாக்குவதற்கும் பீரங்கி வாகனங்களும் பீரங்கி பொருத்தப்பட்ட ஹெலிக்கொப்டர்களும் பயன்படுத்தப்பட்டன.

கிழக்குக் கரையோரம் முல்லைத் தீவிலிருந்து வன்னியில் ஒட்டுசுட்டான் வரை வடகிழக்கில் கிளிநொச்சி நோககிய பிரதேசம் முழுவதும் ஆயிரக்கணக்கான இந்தியத் துருப்பினர் பரவியிருந்தனர். இப்பகுதிகள் சுற்றி வளைக்கப்பட்டுத் தேடுதல் வேட்டைகள் தீவிரமாக்கப்பட்டிருந்தன.

முக்கியமாகக் குறி வைக்கப்பட்ட விடுதலைப் புலிகள் அடர்ந்த காட்டுக்குள் பாதுகாப்பாக சுறுசுறுப்புடன இருந்தனர். ஆனால் அப்பாவிப்பொது மக்கள் பலர் இந்த இந்திய இராணுவ நடவடிக்கையில் மாண்டனர்.

இந்த ஆரம்பத்தாக்குதலில் விடுதலைப்புலிகளை அவர்களுடைய இடத்திலிருந்து துரத்த எடுத்த முயற்சி தோல்வியடைந்திருந்ததைத் தொடர்ந்து இந்திய இராணுவத் தலைமை மேலும் இராணுவ நடவடிக்கைகளை எடுப்பதற்குத் திட்டமிட்டது.

1988ஆம் ஆண்டு ஜுன் மாதத்திலிருந்து "செக்மேற்" என்ற குறியீட்டுப் பெயருடன் இந்திய இராணுவம் பல இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்த இராணுவ நடவடிக்கைகளில் அலம்பில் காடுகளில் விடுதலைப் புலிகளின் தளங்களை இந்தியப் படையினர் தனித்து அடையாளம் கண்டனர்.

இந்தப் பிரதேசத்தில் பீரங்கிப் படையும் விமானப் படையும் பாரிய குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டன. தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது இரவும் பகலும் ஆயிரக்கணக்கான தொன் எடையுள்ள குண்டுகளும் எறிகணைகளும் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டது.

என்றாலும் இந்தத் தீவிரத் தாக்குதலும் தோல்வியில் முடிந்தது. ஆச்சரியப்படும் வகையில் விடுதலைப் புலிப் போராளிகளின் இழப்பு குறைவாகவே இருந்தது. வனாந்தரப் போரில் அனுபவம் பெற்றிருந்தாலும் இந்தியப்படையின் கொமாண்டோப் பிரிவினர் விடுதலைப் புலிக் கெரில்லாக்களிடம் தோல்வியைச் சந்தித்தனர்.

ஏப்ரல் 15ஆம் திகதி மணலாறுப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இலங்கைப் படையினர் மீது ஆண்களும் பெண்களும் சேர்ந்த கெரில்லாப் படையினர் நடத்திய தாக்குதலில் இருபத்தியொரு இராணுவத்தினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

நன்கு அரண் அமைக்கப்பட்ட பிரபாகரனுடைய முகாம்கள் அடர்ந்த காட்டில் நெடுந்தூரத்தில் நிறுவப்பட்டிருந்தன. இதன் காரணமாக எங்கள் ஹெலிக்கொப்டரை நெடுங்கேணியில் இறக்காமல் முல்லைத்தீவில் அலம்பில் காட்டில் தரையிறக்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இதன் மூலம் பிரபாகரனின் தள முகாமுக்குத் தரைவழியாகச் செல்லும் தூரம் கணிசமான அளவு குறைக்கப்பட்டது. நாங்கள் தரையிறங்க வேண்டிய இடத்தில் எங்கள் வருகையை எதிர்பார்த்து போராளிகள் சிலர் நின்றனர்.

நாங்கள் இந்தியாவுடன் போரில் ஈடுபட்டிருந்ததால் இந்தப் பிராந்தியத்திலும் இந்தியப் படைகள் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளமாட்டா என்று நம்ப முடியாதிருந்தது.

கொழும்பில் நடைபெற்ற பேச்சுக்களில் இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாடு எடுக்கப்பட்டதால் நாங்கள் அலம்பிலில் தரையிறங்கும் சமயத்தில் இந்திய அமைதிப்படை பழி வாங்கும் நடவடிக்கையில் ஈடுபடக் கூடும் என்று கருதினோம். இதனால் தான் எங்கள் ஹெலி தரையிறங்கிய பகுதியில் போராளிகள் பெருமளவில் காத்து நின்றனர். எங்கள் ஹெலி தரை தட்டியதும்தான் தாமதம், காட்டுகளுள்ளிருந்து சோதியா (சென்னையில் முன்னாளில் பழகிய நட்பு)வின் தலைமையில் ஆயுதம் ஏந்திய பெண போராளிகள் எங்கள் பாதுகாப்பின் ஒரு பிரிவாக வந்துசேர்ந்தனர்.

அதிக நம்பிக்கையின் வளர்ச்சியை அவரது தோற்றம் எடுத்துக் காட்டியது. இந்திய, இலங்கை இராணுவங்களுடன் போரிட்டுப் பெற்ற அனுபவத்தினால் சோதியா "உரமேறிய போராளியாக"க் காட்சியளித்தார்.

இவையெல்லாவற்றையும் விட பெண் போராளிகள் மத்தியில் அவர் மிகப் பிரபல்யம் பெற்று விளங்கினார். அவரைத் தங்கள் தலைவியாகப் பெண் போராளிகள் ஒரே முகமாகக் கருதினர். பெண் போராளிகளின் தலைவியாக சோதியா பதவியுயர்வு பெற்றார்.

இந்தியப்படைகள் இலங்கையில் நிலைகொண்டிருந்த காலத்தில் சோதியா அலம்பில் காட்டில் இருந்த சமயத்தில் ஆபத்தான தொற்று நோய்க்கிருமி அவரது இருதயத்தைத் தாக்கியது. பின்னர் இருதய நோய்க்கு சோதியா பலியானார். ஓர் உறுதி படைத்த - ஆளுமையுள்ள - தலைமையையும் திறமையுள்ள தலைவியையும் பெண் போராளிகள் இழந்தனர்.

சோதியாவுடன் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் ஒன்றாகவே வந்து சேர்ந்த சுகி (இருவருடனும் சென்னையில் நட்புறவு கொண்டிருந்தேன்) பெண் புலிகளின் இரண்டாவது தலைவியானார்.

நாங்கள் கொழும்பிலிருந்து ஹெலிகொப்டரில் அலம்பிலுக்குச் சென்றடைந்த நேரத்தைவிட காட்டுக்குள் பிரபாகரனின் தளமுகாமுக்கு தரைவழியாகப் போய்ச் சேர்ந்த நேரம் அதிகமென்பதைத் தெரிந்து கொண்டோம்.

அடர்ந்த காட்டுக்குள், காட்டுப் பாதைகள், சிற்றாறுகள் ஆகியவற்றைக் கடந்து வளைந்து நெளிந்து நாங்கள் பிரபாகரனுடைய கள முகாமை நோக்கி நடந்து சென்றோம். நீரிழிவு நோயினால் தொடர்ந்தும் நடந்து செல்ல முடியாமல் கஷ்டப்பட்டார் பாலா.

**தமிழில் : எம்.ஜி.**

வேறு வழியின்றி ஒரு கதிரையை எடுத்து இரண்டு நீளக்கம்புகளுக்கிடையே வைத்துக் கட்டி அந்தப் பல்லக்கில் பாலாவை இருக்க வைத்து போராளிகள் மாறிமாறித் தம் தோளில் சுமந்து சென்றனர்.

பிரபாகரனின் முகாமுக்கு எங்களை பாதுகாப்பாக கூட்டிச் செல்வதற்கான ஏற்பாடுகளுக்கு சங்கர் பொறுப்பாக இருந்தார்.

ஆரம்பத்திலிருந்து ஒரு சிலருடன் வன்னிக் காட்டில் பயிற்சியளித்து வந்த காலத்திலிருந்து சங்கருக்கு பிரபாகரனுடன் தொடர்பும் உறவும் ஏற்பட்டிருந்தது.

சங்கர் சில காலம் கனடாவில் தங்கியிருக்க நேர்ந்தபோது வான சாஸ்திரமும் கற்றார். 1983ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கெதிரான இனக்கலவரம் பல தமிழர்களைக் கொதித்தெழச் செய்தது. இதில் சங்கரும் தூண்டப்பட்டார்.

கனடாவில் இருந்த சங்கர் சென்னைக்கு வந்து பிரபாகரனுடன் ஆயுதப் போராட்டத்தில் இணைந்துகொண்டார். போர்க்களத்தில் நீண்ட கால அனுபவமுடைய சங்கர் பிரபாகரனின் மிகுந்த நம்பிக்கைக்குரியவராகவும் விசுவாசம் மிக்கப் போராளியாகவும் உயர்ந்தார்.

பிரபாகரனின் முகாமுக்கு நாங்கள் நடந்து போய்க்கொண்டிருக்கையில் நடந்துவரும் பாதையிலிருந்து தப்பித் தவறி வெளியே கால் வைத்து விடவேண்டாம் என்று சங்கர் என்னை எச்சரிக்கை செய்தார்.


இந்திய இராணுவத்தினர் படை நடத்திய போது இப்பகுதிகளில் தாராளமாக நிலக் கண்ணிவெடிகளை விதைத்துச் சென்றிருக்கிறார்களென்பதையும் சங்கர் போகிற போக்கில் தெரிவித்தார்.

இந்தத் தகவல் தெரிந்ததுமே நான் மேலே செல்லாமல் ஒதுங்கியிருக்கலாம். அப்படி ஒதுங்குவதால் எதுவித பயனும் ஏற்படப்போவதில்லையென்பதும் தெரியும்.

தாங்கள் எவ்வளவு பெரிய ஆபத்தைக் கடந்து சென்றோமென்பது தெரிந்திருந்தும் எங்கள் போராளிகள் அதைப் பற்றிக் கவலைப்படாமல் நடந்து போய்க்கொண்டிருந்தனர்.

பின்னர் நான் மட்டும் ஏன் பயப்படவேண்டும்? ஆபத்து எல்லோருக்கும் ஒன்றுதான் என்று நினைத்துக் கொண்டேன். இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் மனிதன் எதற்கும் தயாராகிவிடுகின்றான். பின்னர் எதையும் எதிர்கொள்ளத் தயாராகிவிடுகின்றான்.

பீதியடைவதனால் நிலக்கண்ணி



வெடியிலிருந்து தப்பிவிட முடியாது மட்டுமல்ல, சந்தோஷமான பயணத்தையும் அது ரசிக்க முடியாமல் செய்துவிடும்.

இந்தியப் படை வேறுவிதமாகவும தனது அடையாளத்தைப் பதித்துச் சென்றிருந்தது.

கடுமையான விமானக் குண்டு வீச்சுக்களும் தொடர்ந்து அடித்த பீரங்கிக் குண்டுத் தாக்குதல்களும் பெரிய மரங்களை முறித்து உடைத்து முண்டங்களாக்கியிருந்தன.

குண்டுகள் விழுந்து பூமியில் ஏற்படுத்திய பாரிய பள்ளங்கள் சிலவற்றில் நீர் நிறைந்திருப்பதைக் காணமுடிந்தது.

அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் நாங்கள் பிரவேசித்துச் சென்ற போது போராளிகள் நீண்ட தூரம் நடந்து சென்று விநியோகப் பொருள்களை எடுத்துச்செல்வதைக் கண்டோம். நாங்கள் காட்டினுள் நெடுந்தொலைவுக்குள் அடர்ந்த பகுதிக்கு நாங்கள் வந்துவிட்டோம் என்பதை உணர்ந்து கொண்டோம்.

இடையிடையே போராளிகளின் ஆயுதக் காவல் நிலைகளையும் மறைக்கப்பட்ட போராளிகளின் நிலைகளையும் பார்த்தபோது நாங்கள் விடுதலைப் புலிகளின் முகாம்களை அண்மித்துவிட்டோம் என்பதை ஊகித்துக்கொண்டோம்.

நன்கு அரணமைக்கப்பட்ட காவல நிலைகள் இங்குமங்கும் தென்பட்டன. நாங்கள் வளைந்து நெளிந்து வனத்தினுள் மேலும் மேலும் நடந்து சென்று கொண்டிருந்தோம். இலைகள் தழைகளுக்கூடாக குடிசை போன்ற சிலவற்றைக் கண்டோம். இலை தழைகளால் கவனமாக மூடிமறைக்கப்பட்ட ஒரு பெரிய குடிசைக்கு அருகில் நாங்கள் வந்துவிட்டோம். எங்கள் வருகை பற்றிப் பிரபாகரனுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும். நாங்கள் முகாமுக்குள் போய்ச் சேர்ந்ததும் பிரபாகரனும் விரைவாக அந்த இடத்துக்கு வந்தார்.

காட்டுக்குள் வசிப்பதற்குரிய அடையாளம் எதுவுமில்லாமல் காட்டுப் பச்சை நிறத்தில் ஆடை அணிந்திருந்த பிரபாகரன் எங்களை அன்போடு வரவேற்றார்.

கெரில்லா போராளி முகாம் என்று சொல்ல முடியாதபடி சுத்தமான சுற்றுச் சூழல்களைக்கொண்ட விரிவாக்கப்பட்ட ஒரு கிராமமாகவே அந்த இடம் காட்சியளித்தது.

இவ்வளவு கஷ்டங்கள் தொல்லைகளுக்கு நடுவே தமது போராளிகளைப் பண்பு நிறைந்த மனோநிலைக்கு பிரபாகரன் பயிற்றுவித்திருப்பதை உணர முடிந்தது.

எங்கள் போராளிகளின் அபூர்வமான போராட்டங்களையோ சுத்தமான இந்த முகாமை உருவாக்குவதற்கு அவர்கள் பட்ட கஷ்டங்களையோ இந்த முகாம் எந்த விதத்திலும் பிரதிபலிப்பதாக இருக்கவில்லை.

வசிக்கக் கூடியதாக இருப்பதற்காக பழைய பெரிய மரங்களின் மறைவில் மாசுபடாத வனத்தில் இந்த விரிவாக்க அமைப்பு இருந்தது. மலைகளை உடைத்தும் நீருக்காக நிலத்தைத் தோண்டியும் பல போராளிகள் ஒன்று சேர்ந்து முகாமை அமைத்திருக்கிறார்கள்.

பல சந்தர்ப்பங்களில் நீருக்காக அறுபது எழுபது அடி ஆழத்தில் கிணறு தோண்டியும் கடைசியில் அந்த இடத்தில் நீர் இல்லை என்பதை அறிந்து கைவிட்ட கதையும் உண்டு.

இதேநடைமுறை வேறு இடங்களில் பின்பற்றப்பட்டு நீர் ஊற்று உள்ள இடத்தைக் கண்டு பிடித்திருக்கின்றனர்.

இந்த முகாம் தொடங்கிய ஆரம்ப நாள்களில் ஒழுங்கான உணவு விநியோகம் இருக்கவில்லை. உப்பில்லாத பருப்பையும், சோற்றையும் ஒரு நாள் ஒருநேர உணவாகக் கொண்டு போராளிகள் நாள்களை நகர்த்தியிருக்கின்றனர்.

இந்தக் கஷ்டங்களுக்கு நிவாரணம் தேடுவதற்காகப் போராளிகள் நிலக் கண்ணிகள் விதைக்கப்பட்ட இந்தக் காட்டுக்குள் நடந்து திரிந்து உலர் உணவுப் பொருள்களைப் பெறுவதற்கு புதிய பாதைகளை உருவாக்கவேண்டிய அவசியமேற்பட்டது.

காட்டுக்குள் ரோந்துக் காவலில் ஈடுபட்ட இந்திய இராணுவத்தினரின் கண்களில் படாமல் இவர்கள் சென்று உணவுப் பொருள்களைக் கொண்டு வர வேண்டியிருந்ததால் இப்பொருள்களைக் கொண்டுவருவதற்கு ஒரு முழுநாள் தேவைப்பட்டது.

அரிசி மூடைகள், கோதுமை மா, சீனி மற்றும் பொருள்கள் முகாமுக்கு தோளிலும், தலையிலும் சுமந்தே கொண்டுவரப்பட்டன. இந்த ஆபத்தான வேலைகளில் பெண் போராளிகளும் தங்கள் பங்களிப்பைச் செலுத்தினர்.

இப்படிக் காட்டைப் பழக்கி, முகாம் அமைத்து அதை மக்கள் வாழுமிடமாக்கி வாழ்க்கை ஒழுங்கு முறையாகவும் வழமையாகவும் அமைந்த நிலையில்தான் நாங்கள் அங்கு போய்ச்சேர்ந்தோம்.

### பதுங்கு குழிகள்

நிலத்தில் சுரங்கம் பல தோண்டியிருப்பதைப் பார்த்த போதுதான் விமானக்குண்டு வீச்சு, எறிகணைத் தாக்குதல்களின் ஆபத்தை அவை எடுத்துக்கூறின.

ஓயாத எறிகணை வீச்சினால் பிரபாகரனின் முகாமில் ஏற்பட்ட இழப்பு மிகக்குறைவே. இரண்டு பெண் போராளிகள் மாண்டனர்.

உணவில்லாவிட்டால் கூட எறிகணை, விமானத்தாக்குதல்கள் தொடங்கினால் பதுங்கு குழிக்குள் எத்தனை மணிநேரமானாலும் தாக்குதல் ஓயும்வரை இருக்க வேண்டும். இது பிரபாகரனின் கண்டிப்பான ஆணை, அதனால் உயிரிழப்பு வெகுவாகக் குறைந்திருக்கிறது. இந்த வகையில் உயிரிழப்பைக் குறைப்பதில் பிரபாகரன் வெற்றிபெற்றிருக்கிறார்.

(வளரும்)

# மக்கள் வங்கி

## வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி!

**21-11-2001 புதன்கிழமை அன்று அச்சுவேலியில் கோலாகலமான திறப்புவிழா வைபவம்**

## அச்சுவேலிக்கு ஒரு முழுமையான மக்கள் வங்கிக் கிளை

தற்போது யாழ்.ஸ்ரான்லி வீதியின் நீடித்த கருமபீடமாக இயங்கிவரும் அச்சுவேலி மக்கள் வங்கி எதிர்வரும் 21.11.2001 புதன்கிழமை முதல் ஒரு தனித்துவமான கிளையாக இயங்கவுள்ளது என்பதனை எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் பெருமகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் திரு.து.வைத்திலிங்கம் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளும் இவ்வைபவத்தில் அரச உயரதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள், மக்கள் வங்கி உயரதிகாரிகள் மற்றும் பல பிரமுகர்கள் சிறப்பு அதிதிகளாகக் கலந்துகொண்டு சிறப்பிக்க இருக்கிறார்கள்.

**எமது அன்பான வாடிக்கையாளர்களே!**

தாங்கள் அனைவரும் அன்றையதினம் இவ்வைபவத்தில் கலந்துகொண்டு சிறப்பிக்கவேண்டும் என அன்புடன் அழைக்கின்றோம்.

*மக்கள் வங்கியின்*

வர்த்தகர்களுக்கும், நிறுவனங்களுக்குமான - நடைமுறைக் கணக்குகள்
மகளிருக்கான விசேட சேமிப்புத் திட்டமான வனிதா வாசனா
குழந்தைகளுக்கான சேமிப்புத் திட்டமான இசுரு உதான
பாடசாலை மாணவர்களுக்கான சேமிப்புத் திட்டமான சிசு உதான
விசேட சேமிப்புத் திட்டமான ஜனஜய
மற்றும் மாதாந்த சேமிப்புக் கணக்கான முதலீட்டுச் சேமிப்புக் கணக்குகள்
போன்ற புதிய கணக்குகளை அன்றையதினம் ஆரம்பித்தும், தற்போது அச்சுவேலியில் தாங்கள் வைத்திருக்கும் கணக்குகளில் பண வைப்புக்களை மேற்கொண்டும், புதிய வாடிக்கையாளர்களை அறிமுகம் செய்தும் வைபவத்தைச் சிறப்பிக்குமாறு தயவுடன் வேண்டுகிறோம்.

நடைமுறைக் கணக்கு வாடிக்கையாளர்களுக்கு அன்றையதினம் தொடக்கம் அச்சுவேலி கிளைக்குரிய காசோலைப் புத்தகம் வழங்கப்படும் என்பதனையும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

அச்சுவேலி மக்கள் வங்கியின் நடவடிக்கைகள் மேலும் விரிவுபடுத்தப்பட வங்கியின் சொத்துக்களான வாடிக்கையாளர்களாகிய தங்களது பேராதரவினை மேன்மேலும் வேண்டி நிற்கிறோம்.

*அன்றைய தினம் காலை 8.50ற்கு அச்சுவேலி மக்கள் வங்கி முன்றலில் தவறாது தங்களின் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.*

PEOPLE'S BANK

பிராந்திய முகாமையாளர்
**மக்கள் வங்கி**
**யாழ்ப்பாணம்.**

(C/19281)

# மாணவர்கள் மூவர் கடலில் மூழ்கி மரணம்

## நிந்தவூரில் சோகம்

நிந்தவூர், நவ. 14

அடுத்த மாதம் ஜி. சீ. ஈ. (சாதாரண தரப்) பரீட்சைக்குத் தோற்றவிருந்த மூன்று மாணவர்கள் கடலில் குளிக்கச் சென்ற சமயம் சுழியில் அலப்பட்டு, கடலில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தனர்.

இந்தப் பரிதாச சம்பவம் நிந்தவூரில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

நிந்தவூர் அல்—மதினா வித்தியாலயத்தைச் சேர்ந்த யூ. முகம்மது றாபிஸ் (வயது 17), ஏ முகம்மட் ஹனான் (வயது 17), ஏ. அதீத் (வயது 17) ஆகிய மூன்று மாணவர்களுமே ரியூஷன்' வகுப்பு முடிந்து கடலுக்குக் குளிக்கச் சென்றனர். என்றும்—

அதன் பின்னர் அவர்கள் கரை திரும்பவில்லை என்றும்—கூறப்படுகின்றது.

மூன்று மாணவர்களினதும் சடலங்களைத் தேடும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நேற்றிரவு ஒருவர் சடலம் மீட்கப்பட்டதாக பிந்திக் கிடைத்த தகவல் ஒன்று தெரிவித்தது.

இச் சம்பவத்தினால் நிந்தவூர் பிரதேசம் சோகத்தில் மூழ்கியுள்ளது.

இதற்கிடையில்—

இந்த மாணவர்களது சடலங்களைத் தேடி கடலில் நீந்திய நபர் ஒருவர் சுழியில் அகப்பட்டு அந்தரித்த நிலையில், மீனவர்களால் காப்பாற்றப்பட்டார். அவர் பின்னர் நிந்தவூர் மாவட்ட ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.

(உ)

# ஐ.தே.க. வேட்பாளர் மீது மட்டக்களப்பில் தாக்குதல்

## மாற்றுக்கட்சி வேட்பாளர் கைவரிசை

மட்டக்களப்பு, நவ. 14

மட்டக்களப்பு மாவட்ட ஐ.தே.க. வேட்பாளர் அரசரத்தினம் சசிகரன் தாக்கப்பட்டுள்ளார். அவரது தாயாரும் தாக்குதலுக்கு உள்ளானார். மனைவியின் எட்டுப் பவுண் சங்கிலி அறுத்துச் செல்லப்பட்டது.

திங்கள் நள்ளிரவு அவரது வீட்டுக்குள் நுழைந்த ஒரு குழுவினரே இவ்வாறு அட்டகாசம் புரிந்துள்ளனர். இது குறித்து மட்டக்களப்பு பொலீஸில் முறையிடப்பட்டது. ஆயினும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனக் கூறப்பட்டது.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் சசிகரன் சம்பவம் குறித்து வெளியிட்ட தகவல்கள் வருமாறு:-

திங்கள் நள்ளிரவு 1.45 மணியளவில் மாற்றுக்கட்சி வேட்பாளர் ஒருவரும் அவரது அடியாள்கள் 30 பேரும் சசிகரனின் வீட்டைத் தட்டி உள்ளனர். பயத்தினால் சசிகரன் வெளியே வரவில்லை அவரது தாயார் வெளியே வந்து பார்த்தபோது அவரைத் தூஷணத்தால் ஏசி அடித்துத் தள்ளிவிட்டு வீட்டிற்குள் புகுந்துள்ளனர். சசிகரனை சரமாரியாகத் தாக்கி உள்ளனர்.

அதனைத் தடுக்க வந்த அவரது மனைவியையும் தாக்கி அவரது மேல் சட்டையையும் கிழித்தனர். அவரது கழுத்தில் இருந்த 8 பவுண் சங்கிலியையும் அறுத்துச் சென்றுள்ளனர்.

சசிகரனுக்கு முகத்திலும் வயிற்றிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பிட்ட வேட்பாளருடன் அவரது மெய்ப்பாதுகாவலர்களும் வந்துள்ளனர். அவர்கள் வந்த வாகனத்தின் இலக்கம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

(உ)

# ஏறாவூரில் பொலீஸ் அதிகாரி பிஸ்டல் குழுவின் சூட்டுக்குப் பலி

## சிவிலியன் ஒருவரும் பின்னர் உயிரிழப்பு

ஏறாவூர் வப்மியடி பொலீஸ் சோதனைச் சாவடியிலிருந்த பொலீஸார் மீது நேற்றுக் காலை புலிகளின் பிஸ்டல் குழுவினர் எனச் சந்தேகிக்கப்படுவோர் நடத்திய தாக்குதலில் பொலீஸ் அதிகாரி ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

அதனைத் தொடர்ந்து அப்பிரதேசத்தில் நாலாபுறமும் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. அருகில் கடை வைத்திருந்த மணி என்பவர் இதில் படுகாயமடைந்தார். ஏறாவூர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்படுகையில் அவர் உயிரிழந்தார். அவரின் சடலம் ஏறாவூர் ஆஸ்பத்திரியில்ஒப்படைக்கப்பட்டது.

கொல்லப்பட்ட பொலீஸ் அதிகாரியின் சடலம் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தின் பின்னரும் அப்பகுதியில் துப்பாக்கி வேட்டுச்சத்தங்கள் கேட்டுக்கொண்டிருந்தாக அருகில் உள்ள பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

(உ)

# சாவகச்சேரி வர்த்தகர்களுக்கு நிதி உதவி வழங்க ஏற்பாடு

சாவகச்சேரியில் வர்த்தக நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கு அங்குள்ள 285 வர்த்தகர்களுக்கு அடுத்த வாரம் விசேட கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு இந்நிதியை வழங்கும்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர்மன்றப்பிரதிநிதிகள் நேற்றுநடத்திய சந்திப்பின் போது இது பற்றித்தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தில் அங்கம் வகிக்கும் சாதாரணதர வர்த்தகர்கள் 150 பேருக்கு தலா ஒரு லட்சம் ரூபாவும். 79 இடைநிலை வர்த்தகர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாவும்—

56 சிறுவர்த்தகர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

இக்கொடுப்பனவுகள் முதற்கட்டக்கொடுப்பனவாக, 50 வீதமான கொடுப்பனவு அடுத்த வாரம் வழங்கப்படவுள்ளது.

இதற்கென வடக்கு அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து நிதி பெறப்பட்டுள்ளது. (ஐ—173—117)

# ஏறாவூரில் ஊர்காவலர் உயிரிழப்பு

மட்டக்களப்பு. ஏறாவூரில் அமைந்துள்ள பொலீஸ் காவல் நிலையம் ஒன்றின்மீது புலிகள் நடத்திய தாக்குதலில் ஊர்காவல்படை உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டார். பொலீஸாரிடமிருந்து ஆயுதங்களும் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமை இரவு 11.15 மணியளவில் புலிகள் நடத்திய இந்தத் தாக்குதலில் காவலரண் முற்றாக அழிக்கப்பட்டதாகவும் இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்ட ஊர்காவல்படை உறுப்பினரின் சடலத்தையும், பெருந்தொகையான ஆயுதங்களையும் தாம் கைப்பற்றியுள்ளதாகவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (க—6—9)

# விபத்தில் இளைஞர் படுகாயம்

யாழ்ப்பாணம், நவ. 14

கட்டைப்பிராய்ப் பகுதியில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் இடம்பெற்ற மினிபஸ்—சைக்கிள் விபத்தில் சிக்கி இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கட்டைப்பிராய், கலைமணி வீதியைச் சேர்ந்த தளையசிங்கம் சின்னராஜா (வயது 25) என்பவரே காயமடைந்தவராவார். (க—6)

# விளையாட்டு போட்டி

கோப்பாய், நவ. 14

தீபாவளி தினத்தையொட்டி கோப்பாய் கண்ணகை அம்மன் சனசமூக நிலையமும் ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் தடகள விளையாட்டுப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் கழகத் தலைவர் ம. அசோகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. கிழக்கு பிரதேச சபைத் தலைவர் பூ. குணசிங்கர் கலந்துகொள்வார். (க—72)

# சிறுவனின் சடலம் உறவினரிடம் ஒப்படைப்பு

திருட்டுச் சம்பவம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சமயம் வலிப்பு நோயால் உயிரிழந்த சிறுவனின் சடலம் நேற்று அவனது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

தென்மராட்சியில் இருந்து இடம் பெயர்ந்து புலோலி வல்லிபுரக்குறிச்சியில் வசித்து வந்த நடராசா கமலராஜ் என்ற சிறுவனே திருட்டுச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இவருடன் இவரது தாயாரான நடராசா சாந்தினியும் கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த சமயம் கடந்த 11 ஆம் திகதி சிறுவனுக்கு வலிப்பு நோய் ஏற்பட்டு சிகிச்சை பயனளிக்காத நிலையில் உயிரிழந்தார்.

இதனையடுத்து சிறுவனின் மரணச் சடங்கில் கலந்து கொள்ளும் பொருட்டு சிறுவனின் தாயாரானசாந்தினியை கடந்த 12 ஆம் திகதி 5 ஆயிரம் ரூபா சரீர பிணையில் நீதிவான் அ. பிரேம்சங்கர் விடுதலை செய்தார்.

பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்ட சிறுவனின் சடலத்தை அடக்கம் செய்ய வேண்டும் என்று நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (க—6)

# வேட்பாளர்கள் இருவர் உட்பட 6 பேர் அம்பாறையில் கடத்தல்.

கொழும்பு, நவ. 14

அம்பாறை மாவட்டத்தில் வேட்பாளர்கள் இருவர் உட்பட 6 பேர் இனந்தெரியாத ஆயுதக்குழு ஒன்றினால் நேற்று முன்தினம் இரவு கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

அம்பாறை, மருதானைப் பகுதியில் தேர்தல் பிரசாரத்தை முடித்துக்கொண்டு தனது ஆதரவாளர்கள் 4 பேருடன் ஜீப்பில் வந்த சுயேச்சைக்குழு (இலக்கம் 9) சார்பில் போட்டியிடும் ஏ. எஸ். ரகிம் என்பவரை வழிமறித்த ஆயுதக்குழு ஒன்று—

அவர்களைக் கடத்திச்செல்லும்போது அந்த வீதியால் வந்த பொ. ஐ. முன்னணி தேசியப் பட்டியலில் இடம்பெற்றுள்ள ஏ. அம்ஜான் என்பவரையும் வழிமறித்துக் கடத்திச் சென்றுள்ளனர்.

கடத்திச் சென்ற 'ஜீப்' அரை கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள செல்லநீலாவளி என்ற இடத்தில் கைவிடப்பட்ட நிலையில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பாக கல்முனை பொலீஸில் உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளதைத் தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்று வருவதாக கல்முனை உதவி பொலீஸ் அத்தியட்சகர் நிமால் பெரேரா தெரிவித்தார்.

இதேவேளை—இந்த கடத்தல் சம்பவத்துக்கும் ஓர் அரசியல் கட்சிக்கும் இடையில் தொடர்பு இருப்பதாகவும்—

அம்பாறையில் வேட்பாளர்கள் கடத்தப்பட்டமை இதுவே முதல் தடவை எனவும்—

அந்த பகுதி மக்கள் தெரிவித்ததாக செய்தி ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டது.

(க—6—3—9)

# தேர்தல் வன்முறை அதிகரிப்பு; நிலைமையை ஆராய கூட்டம்

## ஆணையாளர் வெள்ளியன்று கூட்டுகிறார்

கொழும்பு, நவ. 14

பொதுத் தேர்தல் தொடர்பான வன்முறைகள் தினமும் அதிகரித்து வருகின்றன. இதனையடுத்து நீதி, நியாயமான தேர்தலை நடத்தும் வழிமுறைகள் குறித்து ஆராய எதிர்வரும் வெள்ளிக்கிழமை கூட்டம் ஒன்றை தேர்தல் ஆணையாளர் கூட்டவிருக்கின்றார்,

தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் பிரதிநிதிகள் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் 629 ஆக உயர்ந்துள்ளன.

இதக்கிடையே —

புத்தளம் மாவட்ட ஐ, தே. கட்சி வேட்பாளரான ரங்க பண்டாரவுக்கு நீதிமன்ற ஆணையைக் கையளிக்கச் சென்ற புத்தளம் நீதிமன்ற ஊழியர் ஒருவர் இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டார்.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்து புத்தளம் நீதிமன்ற ஊழியர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

(உ)

# வன்னி வயோதிபர்கள் இனி தடையின்றி தெற்கே செல்லலாம்

## 'பாஸ்' பிணை நடைமுறை நீக்கம்

வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளிலிருந்து வவுனியாவுக்கு வரும் வயோதிபர்கள் இனிமேல் எதுவித தடையுமின்றி தெற்கே செல்லலாம்.

இது தொடர்பாக இதுவரை காலமும் நடைமுறையில் இருந்து வந்த விதிமுறை நீக்கப்பட்டுவிட்டது.

வெளிமாவட்டங்களுக்குச் செல்வதற்காக இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிகளில் இருந்து வவுனியா வரும் வயோதிபர்கள் தமது வயோதிபர் அடையாள அட்டையைச் சமர்ப்பித்து விசேட 'பாஸ்' பெறவேண்டும். அத்துடன் ஒருவரைப் பிணை வைக்கவும் வேண்டும்.

இந்த நடைமுறைகள் நீக்கப்பட்டு 'பாஸ்' பிணை இல்லாமல் அவர்கலள வெளிமாவட்டங்களுக்குச் செய்ய முடியும் என்று படையினர் அறிவித்துள்ளனர்.

நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா அலுவலகத்துக்கு இது அறிவிக்கப்பட்டதாக அந்த அலுவலக இணைப்பாளர் எஸ். ரவீந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் வசிப்பவர்கள் தமது வயோதிப அட்டையைக் காட்டி பிணை எதுவும் இன்றி வெளிமாவட்டங்களுக்குச் செல்வ ஏற்கனவே வசதி அளிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

(க)

## புலிகளின் அதிரடித் தாக்குதலில்

# மட்டு. பாலமுனைப் பகுதியில் பொலீஸார் மூவர் உயிரிழப்பு

வவுனியா, நவ. 14

மட்டக்களப்பு பாலமுனைப் பகுதியில் அமைந்திருந்த பொலீஸாரின் காவலரண் ஒன்றின் மீது கடந்த சனிக்கிழமை இரவு 11—15 மணியளவில் புலிகள் நடத்திய தாக்குதலில் 3 பொலீஸார் கொல்லப்பட்டனர். அவர்களிடம் இருந்து ஆயுதங்களும் மீட்கப்பட்டன.

இவ்வாறு 'புலிகளின்குரல்' வானொலி அறிவித்துள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

சுமார் 10 நிமிடம் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் பொலிஸாரின் காவல் நிலையம் முற்றாக அழிக்கப்பட்டதுடன் அவர்களிடம் இருந்து 60 மில்லி மீற்றர் எறிகணை செலுத்திகள்—2, பி. கே. எல் எம். ஜி துப்பாக்கி -1, 40 மில்லி மீற்றர் எறிகணை செலுத்தி -1, ஆர். பி. ஜி -1, தொலைத்தொடர்பு சாதனம் -1, கைக்குண்டுகள் உட்பட பல ஆயுதங்கள் தம்மால் மீட்கப்பட்டுள்ளதாகவும்—

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் தமது தரப்பில் கப்டன் சாந்தா (கந்தையா இந்திராணி) மட்டக்களப்பு) என்ற போராளி களப்பலியானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(க—6—9)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இறைச்சிக்கோழி

புறொயிலர், கல்பேட்ஸ் என்பன விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். லவ்பேட்ஸ் கூட்டுடன் விற்பனைக்கு உண்டு. 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில் (கண்ணா வீடியோ சென்றர் வளவு). (94411)

புறொயிலர், கல்பேட்ஸ், சேவல் என்பன சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 68, Old Park Road, Jaffna. (94496)

புறொயிலர், கல்பேட்ஸ், சேவல் இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (94244)

புறொயிலர் 1kg 170/=, கல்பேட் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: I.மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில் (கண்ணா வீடியோ சென்றர் வளவு). II.சே.கிருஷ்ணகுமார், பொன்னாலை வீதி, மானிப்பாய் (விதானை வளவு). (94486)

இறைச்சிக்கோழி BROILER, CULL-BIRD என்பனவும் கடைப் பாவனைக்கு உரிய Showcase ஒன்றும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:College Lane, Vaddukoddai. (94499)

இறைச்சிக்கோழி (Broilers), கல்பேட்ஸ், சேவல் என்பன விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல.15, 6ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (94181)

## விற்பனைக்கு

இந்தியத் தயாரிப்பு நீள கோன்கள் 18", 22", 24" யூனிற்கள், 40w FM மைக்குகள், ஆலய பாவனைக்கு உகந்த பட்டுக் குடைகள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ம.மயூரன், மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (94432)

17.5 **K.W. (3Phase)** டைனமோவுடன் கூடிய **Lister Engine** விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஜீ ஜெயதீஸ், காளிகோயிலடி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (94462)

டாஸ் ஒன் ஒரு வருட நாயும், டாஸ் ஒன் 2 மாத பெண் நாய்க்குட்டியும், பொமேரியன் 21/2 மாத ஆண் நாய்க் குட்டியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஸோபிதா, மேற்பார்த்து பஞ்சாட்சர நாதன், குளங்கரை, கொக்குவில் கிழக்கு. (94488)

வாங்குகள், மேசைகள், கரும்பலகைகள், விளம்பரப் பலகைகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மு.லோகநாதன், பழைய தபாற கந்தோர் வீதி, சங்கானை. (94491)

45 நாள்கள் நிரம்பிய அல்சேஷன், 60 நாள்கள் நிரம்பிய டபசோன் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: ம.வாணகுலசிங்கம், ஞானியார் கோயிலடி, அராலி மத்தி. (94481)

வீட்டுப்பாவனைக்குரிய தளபாடப் பொருள்களும் கடைப் பாவனைக்கு உரிய மடிப்பு மரக் கதவு, இரும்பு சுருக்குக் கதவு, இரும்புப் பெட்டகம், கவுண்டர் விறாக்கிகள் போன்றவை விற்பனைக்கு உண்டு. 148 (50), சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (94485)

12 H.P. சைனா டீசல் எஞ்ஜின், 6 K.W. டைனமோ என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வி.இராசலிங்கம், 109, சட்டநாதர் வீதி, கல்வியங்காடு. (94501)

## காணி விற்பனைக்கு

இளவாலை அன்னாள் ஆலய சேமக்காலைக்குத் தென்புறமாகவுள்ள 'பங்கிரானை' 20 பரப்பு (கிணற்றுடன்) தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு, பி.எட்வேட்ராஜா, பத்தாவத்தை, இளவாலை. (94484)

## O/L கணிதம்

உங்கள் வீடுகளுக்கு வந்து ஆண்டு 6 தொடக்கம் O/L 2002, 2001 வரையுள்ள மாணவர்களுக்கு கணிதம் மிகத் துல்லியமாக Paper உடன் கூடிய முழுப்பாடத் திட்டம் Dக்குக் கற்பிக்கப்படும். ஒரு மணித்தியாலத்திற்கு 50/= மட்டும். உடன்தொடர்பு: ஆசிரியர் K.L.சங்கர், 501 A, மொகடீன் பள்ளி வீதி, ஐந்து சந்தி, யாழ்ப்பாணம். (94468)

## ஆங்கிலக் கல்வி

அடிப்படையில் இருந்து எழுத, வாசிக்க, கடிதம், இலக்கணம், கதைக்க, தனித்தனிக் கவனம் வகுப்பில் 10 மாணவர்கள் மட்டும். விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (94445)

## தவறிவிட்டது

பிரபாகரசர்மா நாகேஸ்வரி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.667010837V), விசேட அடையாள (இல.0909016485) என்பன 10.11.2001 இல் யாழ்நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் அத்தியடிப் பிள்ளையார் கோயில், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (94465)

# தொழில்நுட்பம், அழகியல் பாடங்களுக்கு இனி செய்முறைப் பரீட்சை நடக்காது!

## பாடசாலை மட்ட கணிப்பீட்டின்படி பெறுபேறு

அச்சுவேலி,நவ.14

ஜி.சீ.ஈ. சாதாரண தர மாணவர்களுக்கு 2002ஆம் ஆண்டில் இருந்து தொழில்நுட்பம் - அழகியல் பாடங்களுக்கு செய்முறைப் பரீட்சைகள் தனியாக நடைபெறமாட்டாது. பாடசாலை மட்டக் கணிப்பீட்டு வேலைத் திட்டத்தின் ஊடாக பெறப்படும் தரங்கள் பரீட்சைச் சான்றிதழில் உள்ளடக்கப்படும்.

இது தொடர்பான விவரங்கள் பாடசாலைகளுக்கு பரீட்சைத்திணைக களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ. சாதாரண தர மாணவர் கற்கும் தொழில்நுட்பப் பாடங்கள், அழகியல் பாடங்களுக்கு எழுத்துப் பரீட்சை, செய்முறைப் பரீட்சை என்பன தனித்தனியாக நடத்தப்பட்டு வந்தன. இந்த நடைமுறை 2002ஆம் ஆண்டிலிருந்து மாற்றி அமைக்கப்படவுள்ளது.


அழகியல், தொழில்நுட்பப் பாடங்களுக்கான எழுத்துப் பரீட்சைகள் டிசெம்பர் மாதம் நடைபெறும். செயல்முறைப் பரீட்சைக்குப் பதிலாக பாடசாலை மட்டத்திலான கணிப்பீட்டு வேலைத்திட்டத்தின் ஊடாகப் பெறப்படும் தரங்கள் சான்றிதழில் உள்ளடக்கப்படவுள்ளன - என்று பரீட்சைத் திணைக்களம் பாடசாலைகளுக்கு அறிவித்துள்ளது. (ஐ-11)

## பிற்போடப்பட்டுள்ளது

இன்று (14.11.2001) புதன்கிழமை வலி.வடக்கு பிரதேச செயலக அபிவிருத்தித் தொண்டர்கள் நடத்தவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. எனவே சீட்டிழுப்பு எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படவுள்ளது என்பதனை அதிர்ஷ்டசாலிகளுக்கு அறியத்தருகின்றோம்.

அபிவிருத்தித் தொண்டர்கள் நலன்புரிச் சங்கம்,
வலி.வடக்கு பிரதேச செயலகம்,
*தெல்லிப்பழை.* (94494)

## 13ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 1964 - 04 - 22

மறைவு 1988 - 11 - 14

**சுந்தரம்பிள்ளை திருச்செந்தூர்நாதன்**
(சந்திரன் - ஜேர்மனி)

*ஆண்டுகள் பதின்மூன்று ஆனாலும்*
*ஆறாது எம் கவலை தீராது நம் துயரம்!*
*காலங்கள் பல கடந்தாலும்*
*கலையாது உம் நினைவு*

*காரைக்கால்,*
*இணுவில் கிழக்கு,*
*இணுவில்.*

என்றும் உம் நினைவில் வாழும்
குடும்பத்தினர். (94506)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 25 - 10 - 1935

மறைவு 26 - 10 - 2000

**அமரர் கணபதிப்பிள்ளை வேலாயுதம்**
(மெக்கானிக்)

*திதி: சதுர்த்தி (14-11-2001)*

ஆண்டு ஒன்று ஆனாலும்
ஆறாது எம் கடமை
காலங்கள் பல கடந்தாலும்
கலையாது உம் நினைவு

அன்னாரின் பிரிவால் துயருறும்:
வே.மனோகன்மணி (மனைவி)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

*முல்லை,*
*கரணவாய் தெற்கு,*
*கரவெட்டி.*

(94509)

எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
**உளங்கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்!**
"ஓவியத்துறையில் பத்தாவது வருட சேவையில்"
உங்களோடு
**எஸ்.எஸ்.யசோதரன் ஆட்ஸ்**
*185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
*68, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.*
*21-11-1991 — 21-11-2001*
(94513)

## சப்புறம் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள இருவெளிச்சப்புறம் தேக்கம் பலகையிலான படலுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- **நிர்வாக சபை, திருச்சிற்றம்பலப்பிள்ளையார் ஆலயம், நெடியகாடு, வல்வெட்டித்துறை.**

**நெடியகாடு,**
**வல்வெட்டித்துறை.** (94505) **தலைவர்.**

வாடிக்கையாளர்களுக்கு எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
**விற்பனைக்கு**
8' அடி டிஸ் அன்டெனாக்கள் டிஜிடல் மற்றும் அனலொக் ரீஸீவர்கள் தனியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
**அருண் வீடியோ மூவி,**
பிரதான வீதி, நெல்லியடி.
*T.P. 070 - 212801* (94508)

## நன்றி நவிலல்



மாண்புமிகு கௌரவ அமைச்சர்
**K.N.டக்ளஸ் தேவானந்தா** அவர்கள்
செயலாளர் நாயகம்,
ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி.



**கே.வி.குகேந்திரன்** அவர்கள்
(ஜெகன்)
யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளர்,
ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ்.மாவட்டத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட ஜனாதிபதி விருது வழங்கல் போட்டிக்கு யாழ்.மாவட்டத்தில் இருந்து தெரிவாகிய போட்டியாளர்களாகிய நாம் தேசிய மட்டப் போட்டிக்கு கொழும்பு செல்வதற்கான போக்குவரத்து, உணவு போன்ற அனைத்து வசதிகளையும் செய்துதவியமைக்கு மட்டுமன்றி நிதி உதவியையும் வழங்கியமைக்காக கௌரவ அமைச்சர் K.N.டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளர் திரு.கே.வி.குகேந்திரன *(ஜெகன்)* அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கலாசாரப்போட்டிக் குழுவும்,
உதவி இயக்குநரும், அலுவலர்களும்,
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்,
யாழ்ப்பாணம்.

(94512)

## ஐந்தாம் ஆண்டின் நினைவுக் காணிக்கை

கோப்பாய் தெற்கு "குமரகிரி" இல்லத்தின் திலகமாக வாழ்வாங்கு வாழ்ந்து வயது இருபத்தொன்றில் இறைவனடி சேர்ந்த

**செல்வி இ.திலகராணி** அவர்கள்

தோற்றம் 13-02-1975 மறைவு 14-11-1996

இறைவனடி சேர்ந்த காலம் ஐந்தாண்டெனினும்
இதயத்தில் ஒளிவிடும் சுடரே ஆனாய்!
ஓம் சாந்தி!!!

*"சமூக இரத்தினம்"*
*M.K.இளையப்பு J.P.*
*"குமரகிரி" கோப்பாய்.* (94475)

என்றும் நினைவிலுள்ள.
**குடும்பத்தினர்.**

# இறந்தவர்களுக்கு அஞ்சலி!

**குருநகர் புனித யாகப்பர் ஆலயம் ஸ்ரீலங்கா விமானப் படையின் குண்டு வீச்சினால் தரைமட்டமான கோர நிகழ்வு நடந்து நேற்றுடன் எட்டு ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. அதனை ஒட்டிய நினைவுகளை மீட்கிறது இக்கட்டுரை.**

இராணுவப் பயங்கரவாதத்திற்கு மூச்சடங்கிப்போன கொடுமையின் நாளது!

பாரிய உயிரிழப்புகளுக்கு முகம் கொடுத்து மிக நெருக்கமானவர்களை இழந்து வீரமுடன் வாழ்ந்த கிராமம் அது! போராட்ட வாழ்விய லிற்கு விடுதலை விழுமியமும் உரிமை இழப்பிற்கு ஒளிக்கீற்றும் வழங்கிய ஆலயம் அது! 220 வருட குருநகர் பங்குமக்களின் வாழ்வில் இதயமாய் விளங்கிய - 130 வருட தொன்மை நிறை - புனித யாகப்பர் ஆலயம் ஒரு கணப்பொழுது... சிதறிய மனித உடலங்களின் செங்குருதியில்... வானமெங்கும் செங்களல் புகை... ஒரு செங்கற்குவியல். அந்நாள் 13.11.1993. நம்பிக்கை கொடுக்கும் குருநகர் ஆன்மீகச் சுரங்கம் சுக்குநூறாகி நம்பிகை இழந்து நின்றது.

நடந்து முடிந்த கோரநிகழ்வுகளின் பிரேத பரிசோதனைக்கான இடமில்லை இது. நினைவுகளை மீட்டு பழைய காயங்களைப் புதுப்பிப்பதுமல்ல. இறப்புகள் மத்தியில் எமது இயலாமையை வெளிப்படுத்தி விரக்தியின் விளிம்பில் கண்ணீர் விடுவதற்குமல்ல. மாறாக உரிமையின் எதார்த்தம், நீதியின் உள்ளீடு, உரிமை மீறல் ஏற்படுத்தும் அகோர நிகழ்வுகளை மீட்க இந்நினைவு நாள்கள் உதவவேண்டும். மனிதஉரிமை மீறலின் தொடர்மௌனம் இயல்பு வாழ்வு என்று சுட்டலாம். இக்கோர நிகழ்வுகள் உலகில் எம்மூலையிலும் இடம்பெறக் கூடாதென்பதை சமகாலத்தில் வாழ்பவருக்கு மீண்டும் மீண்டும் எடுத்துக்கூறுவதற்கு இந்நிகழ்வுகள் நிறைமனிதநோக்கிய எமது பயணத்தில் உரசிப்பார்க்கப்பட வேண்டும்.

## வாழ்பவர்க்கு எச்சரிக்கை

ஜேர்மனியில் கிட்லர் நாசி அரசு 4 லட்சம் யூதர்களை கொன்று குவித்தது. முனிச்நகர் 10 மைல் தொலைவில் உள்ள டக்காவுவில் (Dachau) பாரிய நாசி வதைமுகாம் இன்னும் நச்சுவாய்வு கருவிகளுடன் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அதனுள் நுழைந்ததும் பல லட்சக்கணக்கான உயிர்களைக் காவுகொண்ட இடத்தில் எனது பாதங்கள்... சற்றுத் தளர்ந்தது. அதன் நுழைவாயிலில் ஒரு மனித வெண்கலச் சிலை அழிக்கப்பட்டவர்களை அடையாளப்படுத்தியது. அதன் கீழ் இரு முக்கிய வசனங்கள்... 'இறந்தவர்களுக்கு அஞ்சலி!, வாழ்பவர்களுக்கு எச்சரிக்கை!' இம்முகாமை நாங்கள் பாதுகாப்பதற்குக் காரணம் இவ்வுலகின் எந்த மூலையிலும் இவ்வாறான நிகழ்வுகள் நிகழக்கூடாது என்றார் முகாமின் பொறுப்பாளர். இந்நிகழ்வு ஜேர்மனியர் முகத்தில் கரி பூசிய நிகழ்வு. ஜேர்மனிய அரசு எண்ணியிருந்தால் ஒருதடயமுமின்றி அழித்திருக்கலாம். அதற்கு மாறாக நாசி ஏற்படுத்திய அழிவுகள் தொடரக் கூடாதென்பதை பாடசாலை மாணவர்களுக்கு ஒவ்வொரு பாடநூலிலும் புகுத்தியுள்ளது. ஒரு நச்சுவாய்வு முகாமிலிருந்து விடப்பட்ட எச்சரிக்கையை உலகம் உன்னிப்பாய்க் கேட்கிறதா? தேசிய ஒப்புரவு, சமாதானம், தேசிய ஐக்கியம் என்றெல்லாம் வடக்கு-தெற்கிலுள்ள புத்திஜீவிகளினால் பலமாகப் பேசப்படுகிறது. இப்பின்புலத்தின் நோக்கின் ஜேர்மன் அரசு தனது பாரிய குற்றங்களை ஏற்றுக்கொண்டு பொறுப்பேற்றது. இது நாகரிகத்தின் வெளிப்பாடு. 1958 தொடக்கம் இடம்பெறும் இனஒழிப்புகளை, கசப்பான உண்மைகளை சிங்கள



அரசு இன்னும் ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை. ஒப்புரவிற்கு குற்றங்களை ஏற்பது முக்கிய நிபந்தனை.

அரச பயங்கரவாதத்திற்கு இரையானவர்களுக்கு அடையாளங்கள், தூபிகள், நினைவாலயங்கள் எழுப்புவது இங்கு முடியாதவொன்று. உயிருள்ள தமிழர்கள் மட்டுமல்ல, இறந்த தமிழர்களின் எலும்புக்கூடுகளும் ஆபத்தானதென்று எடைபோடும் இந்தச் சிங்களச் சிப்பாய்களோடு வாழ வேண்டிய ஒரு துர்ப்பாக்கியம். குருநகரில் இடம்பெற்ற பல கோர அழிவுகளில் மீன்பிடிக்கச்சென்ற 31 அப்பாவி மீனவர்கள் கடலில் வைத்துச் சிங்களச் சிப்பாய்களினால் வெட்டிக் கொத்திக் கொலைசெய்யப்பட்டதுமொன்று. இவர்களது நினைவுச்சின்னத்தையும் கூட அரசு விட்டு வைக்க

# வாழ்பவர்களுக்கு எச்சரிக்கை!!

வில்லை. இன்று அது தெருவோரத்தில் வீழ்த்தப்பட்ட அலங்கோலம்!

தமிழாராய்ச்சி மகாநாட்டில் இறந்தவர்க்கான நினைவாலயங்கள் அழிப்புத் தொடக்கம் இன்றுவரையும் அரசின் இது தொடர் மரபு. நவாலி ஆலய வளாகத்தில் குண்டுவீச்சுக்கு இலக்கான 240 அப்பாவி மக்களுக்கான நினைவு வழிபாடுகள் ஒளிவு மறைவில் நடைபெறவேண்டுமாம். இறந்தவரின் படங்கள் கொண்டுவர முடியாது, வெளியில் மெழுகுதிரிகள் கொளுத்த முடியாது, பகிரங்க ஒலிபரப்பு இல்லை. அவர்கள் அழுத்தங்களுக்குள் திருப்பலி வழிபாடுகள் நடத்தப்பட வேண்டும். நீத்தார் நினைவுகூரல், அவர்களுக்கு நினைவாலயங்கள் நிறுத்துதல் ஒரு நாகரிகத்தின் அடையாளம். நாகரிக வரம்புகளைக் கடந்தவர்களுடன் எமது வாழ்வு தொடர்கிறது! ★

அ.பி.ஜெயசேகரம் அடிகள்
பங்குப் பணியாளர்

சுழிபுரம் விவேகானந்தா இளைஞர் கழக
முன்பள்ளி வளர்ச்சி நிதிக்காக
சாரங்காவின் பொன்மாலைப் பொழுது

தலைவர்:- திரு.சு.புலேந்திரன் அவர்கள் (வி.இ.கழகத் தலைவர்)
இடம் :- யா/விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்
காலம் :- இன்று (14.11.2001) புதன் (தீபாவளி) புதிய நேரம் பி.ப 1.00 மணி

✣ பிரதமவிருந்தினர் ✣
திரு.ந.திரிலோகநாதன் அவர்கள்
(தலைவர், வலி.மேற்கு, பிரதேசசபை, சுழிபுரம்;
ஈ.பி.டி.பி வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளர்)
✣ சிறப்பு விருந்தினர் ✣
திரு.ந.சிவதட்சணாமூர்த்தி அவர்கள்
(உதவி இயக்குநர், தேசிய இளைஞர் சேவை மன்றம், யாழ்ப்பாணம்)
திருமதி வேலுப்பிள்ளை அவர்கள்
(அதிபர், யா/விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்)
திரு.சக்திவேல் அவர்கள்
(மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி, யாழ்ப்பாணம்)
✣ கௌரவ விருந்தினர் ✣
திரு.நா.குமரகுருநாதன் அவர்கள்
(கிராம உத்தியோகத்தர், J/173 சுழிபுரம் மத்தி)
திருமதி குலவீரசிங்கம் அவர்கள்
(கிராம உத்தியோகத்தர்)
திரு.கோகிலராஜா அவர்கள்
(இளைஞர் சேவை அதிகாரி, சங்கானை)
✣ நிகழ்ச்சி நிரல் ✣

☆ மங்கள விளக்கேற்றல் (பிரதம விருந்தினர்)
☆ இறைவணக்கம்
☆ வரவேற்புரை
☆ தலைமை உரை
☆ பிரதம விருந்தினர் உரை
☆ சிறப்பு விருந்தினர் உரை
☆ கௌரவ விருந்தினர் உரை
☆ சான்றிதழ் வழங்குதல்
☆ நன்றி உரை
☆ சாரங்கா குழுவினர் அள்ளி வழங்கும் பொன்மாலைப் பொழுது
☆ துள்ளிசை நடன நிகழ்ச்சி

நிர்வாகிகள், விவேகானந்தா இளைஞர் கழகம்.
(C/19300)

வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி.
லொறிச் சாரதிக்கான விண்ணப்பம் கோரல்

ஒப்பந்த அடிப்படையில் லொறி (பாரவூர்தி) செலுத்தக் கூடிய சாரதிக்கான விண்ணப்பம் கோரப்படுகிறது.

வயதெல்லை - 21 - 45வயது
அனுபவம் - பாரவூர்தி (லொறி) செலுத்துவதில் ஐந்து வருடங்களுக்கு மேலான அனுபவம்
சம்பளம் - நேரில் பேசித் தீர்க்கப்படும்
தராதரம் - எட்டாம் வகுப்பு சித்தி

சங்க எல்லைக்குட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி - 01.12.2001

நீர்வேலி,
2001.11.12
பொது முகாமையாளர்.
(C/19296)

சுடர் ஒளி
18-11-2001
☆ தீபாவளிக் கலாட்டாக்கள் - நகைச்சுவை விருந்து.
☆ கிழக்கில் தாக்குதல்களை அதிகரித்துள்ள புலிகள்.
☆ லண்டனில் ஜனாதிபதியை குடைந்த செய்தியாளர்கள்.
☆ வாக்காளர்களை வியப்பில் ஆழ்த்தும் வேட்பாளரின் குத்துக்கரணங்கள்
☆ அமெரிக்காவுக்குப் பேரிடி; பின்லேடன் போட்ட குண்டு.
☆ பட்டணம் வந்து கெட்டுப்போகும் மலையகத்துப் பட்டாம் பூச்சிகள்.
☆ தேர்தலில் தமிழர் வழங்கிய ஆணை எப்பொழுதாவது நிறைவேறியதா?
☆ ஓயாத அலைகள் வெளிவராத தகவல்கள்.
☆ யாழ்.எரிபொருள் தட்டுப்பாடு; மக்கள் மத்தியில் ஐயப்பாடு.
☆ மற்றும் பல சுவையான அம்சங்கள். (C/19299)

## மணலாறில் சிப்பாய் பலி; மூவர் காயம்

கொழும்பு,நவ.14

மணலாறு ஜானகபுர பகுதியில் நேற்றுமுன்தினம் ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் மூவர் காயமடைந்தனர்.

படையினர் நடத்திய பதில் தாக்குதலில் புலி உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க)

# பாதுகாப்பு அனுமதியின்றி கொழும்பில் 300 பேருக்கு விமான டிக்கெட்!

கொழும்பு,நவ.14

யாழ்ப்பாணத்திற்கு விமானம் மூலம செல்வதற்கு நேற்றுவரை 300க்கும் மேறபட்டவர்களுக்கு 'டிக்கெட்'டுக்கள வழங்கப்பட்டுள்ளன.

ஹெலிரூர்ஸ் நிறுவனத்தின் பம்பலப்பிட்டி அலுவலக அதிகாரியான எஸ்.பிரேமவர்த்தன இத்தகவலைத் தெரிவித்தார்.

பொலீஸ் பதிவுப் பத்திரம், அடையாள அட்டை ஆகியவற்றுடன் வருவோர் டிக்கெட்டை பெற்றுக்கொள்ளலாம் என்றும் -

பாதுகாப்பு அமைச்சின் அனுமதி இப்பொழுது தேவையில்லை என்றும் - அவர் சொன்னார்.

கப்பல் மூலம் அல்லது விமானத்தில் ஒருவழிப் பயண டிக்கெட்டுடன் வந்தவர்களும் அந்த டிக்கெட்டுக்களையும் யாழ்ப்பாணத்தில் வழங்கப்பட்ட பயணப் பதிவுப் பத்திரத்தையும் சமர்ப்பித்து டிக்கெட்டுக்களைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் - அவர் விளக்கம் அளித்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து பயணம் செய்யும் நடைமுறையில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை வழமைபோல் பாதுகாப்பு அனுமதி பெற்றே டிக்கெட்டுக்களை அங்கு பெறமுடியும் என்றும் அவர் மேலும் சொன்னார். (க-9)

# திருமலை ஆஸ்பத்திரியில் ஊழியர்கள் உண்ணாவிரதம்

திருகோணமலை ஆதார வைத்திய சாலையில் பணிபுரியும் சமயாசமய ஊழியர்கள் கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்த உண்ணாவிரதம் நேற்று இரண்டாவது நாளாகவும் நீடித்தது. வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவு மாத்திரம் இயங்கியது. கிண்ணியா, கந்தளாய், மூதூர் வைத்தியசாலைகளில் பணிபுரியும் ஊழியர்களும் இந்தப் போராட்டத்தில் இணைந்து கொண்டனர்.

1994 ஆம் ஆண்டு தற்காலிக நியமனம் பெற்றவர்களில் சிலர் படிப்படியாக நிரந்தர நியமனத்துக்கு உள்வாங்கப்பட்டிருந்தனர். எஞ்சிய 32 பேருக்கு இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை.

இதனை ஆட்சேபித்தே இந்தப் போராட்டம் ஆரம்பமாகியுள்ளது. (க-145)


தீபாவளி தினத்தன்று தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் அழகிய அட்டைப் படத்துடன் வெளிவருகிறது

**ஆச்சிரமத்தின் தீபாவளி மலர் - 2001**

*திகதியும் நேரமும்:* **14-11-2001 மாலை 4 மணி.**
*வெளியிடப்படும் இடம்:* **ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்.**

*ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான அறங்காவலர்*
உயர்திரு. இ. அன்னலிங்கம் *மலரை வெளியிட்டு வைப்பார்.*
*முதற் பிரதியைப் பெறுபவர்:*
திரு. அ. சோமசுந்தரம்பிள்ளை
B.A.,FCA பட்டயக்கணக்காளர்.
*சிறப்புப் பிரதிகள் பெறுபவர்கள்:*
திரு. பா. நடராஜசுந்தரம் } சேவாச்சிரம
திரு. வி. இராஜலிங்கம் } Directors
திரு. A.K.நடராஜா J.P.U.M.
திரு. S.பாலச்சந்திரன், கொழும்பு
மலரின் விலை: 100/=
*ஸ்ரீ ராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை. 12.11.2001.* செயலாளர். (C/19295)


## தொண்டமானின் வாகனம் சேதம்

புசல்லாவையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் தொழிலாளர் ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் இடையே இடம்பெற்ற மோதலின்போது முன்னாள் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் வாகனமும் சேதமடைந்தது.

ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த மோதலில் இருவர் காயமடைந்து புசல்லாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க-9)

## திருமலையில் மறியற் போருக்கு அழைப்பு

வடக்கு - கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர் சங்கம் எதிர்வரும் திங்கட்கிழமை மறியற் போராட்டம் ஒன்றிற்கு அழைப்பு விடுத்துள்ளது.

உள்துறைமுக வீதியில் அமைந்துள்ள பிரதம செயலாளர் அலுவலகத்தின் முன்னால் அன்று காலை அனைத்து ஊழியர்களையும் ஒன்றுகூடுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (க-145)




**IIS இன் உளமார்ந்த தீபாவளி வாழ்த்துக்கள்**

இனிய இத்தீபாவளித் திருநாளில் எமது மாணவர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள் நலன் விரும்பிகள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில்பெரும் மகிழ்ச்சியடைகின்றோம்.

இயக்குநர்,
இணைப்பாளர்கள், விரிவுரையாளர்கள்,
ஊழியர்கள்

"IIS வடக்கின் தகவல் தொழில்நுட்ப மையம்"

IIS, யாழ்ப்பாணம் IIS, நெல்லியடி IIS, சங்கானை



**ஸ்ரீசெல்வா சினிமா**
யாழ்ப்பாணம்
ரஞ்சித், மகேஸ்வரி நடித்த
**நெருப்பு**
தினசரி:– 10.30, 2.30
விஷ்ணுவின் புதிய வெளியீடு



**அப்பலோ வைத்திய நிலையம்**



இல.16, பலாலி வீதி,
(ஆரியகுளம் அருகில்)
யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில் நாம் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.

தொடர்ந்து எங்களது வைத்திய நிலையத்தில் "கண்" வைத்திய சிகிச்சையும் கண் சத்திரசிகிச்சையும் நடை பெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

குறிப்பு:
கண் சத்திரசிகிச்சைக்குரிய கண் வில்லைகளும் விற்பனைக்குண்டு.

தொலைபேசி: 3305 - நிர்வாகம்.



**Computer Courses**

**DIPLOMA IN MICROSOFT OFFICE**
- Introduction to Computer
- Ms Word 2000 / XP
- Ms Excel 2000 / XP
- Ms Access 2000 / XP
- Ms Power Point 2000 / XP
- Photo Draw 2000 / XP

Full Syllabus Coverd
Duration: 6 Months
Special Offer Rs. 1900/=

**DIPLOMA IN COMPUTER PROGRAMMING**
- Introduction to Computer
- Programming Techniques
- Ms Word 2000 / XP
- Ms Excel 2000 / XP
- Ms Windows me
- Visual Basic 6.0
- C/C++
- HTML Programming
- E-Mail & Internet

Full Syllabus Coverd
Duration: 9 Months
Special Offer Rs. 3250/=

பயிற்சிகள் ஆரம்பம் 24-11-2001 11.a.m

**CERTIFICATE COURSES**

| | |
|---|---|
| Ms Word 2000 / XP | Visual Basic 6.0 |
| Ms Excel 2000 / XP | Corel Draw 10.2 |
| Ms Access 2000 / XP | Pascal |
| Pagemaker 6.5 | HTML |
| Auto Cad 2000i | Java |
| | C/C++ |
| (Each 3 Months) | (Each 4 Months) |

*Note:-*
*இப்பிரிவுக்கு மட்டும் பதிவுக்கட்டணம் அறிவிடப்படமாட்டாது.*

**JAFFNA TECHNICAL INSTITUTE**
No. 07, Palaly Road, Jaffna (C/19283)



**SPECIAL COMPUTER COURSES**
**START ON 18-11-2001 AT 10.00 AM**

*Certificate in Java Programming*
Duration: 4 Months Fee : 2500/=

*Certificate in Computer Hardware Engineering*
Duration: 4 Months Fee : 3000/=

*Certificate in Web Designing*
(Flash, Front Page and HTML)
Duration: 3 Months Fee : 3000/=

*Diploma in MS Office*
Duration: 5 Months Fee : 3000/=

நவீன கணனி உலகிற்கு ஏற்ற வகையிலும் இலகுவாக வேலை வாய்ப்புக்களைத் தட்டிக் கொள்ளக்கூடிய வகையிலும் விசேடமாக வடிவமைக்கப்பட்ட பயிற்சி நெறிகள் இவையாகும்.

மேற்படி பிரிவுகளுக்கு பதிவுக் கட்டணம் எதுவும் அறவிடப்பட மாட்டாது

INSTITUTE OF INFORMATICS STUDIES
100 Clock Tower Road, Jaffna
T.P No: 021-2831 Email: iis@slt.net





யுத்தத்தின் அவலங்களில் பிழைப்பு நடத்துவோரை வீழ்த்திட.....

சமாதானத்துக்கான சர்வதேச ஆதரவைப் பெற்றிட.....

ஆதரிப்பீர் தமிழர் கூட்டணியை!

**சுரேஷ் பிரேமச்சந்திரன்**

**தமிழர் விடுதலைக் கூட்டணி**

சின்னம் – இலக்கம் 4


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.11.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

உதயன் தீபாவளிச் சிறப்பிதழ்

14.11.2001

# தீபாவளியின் புனிதம் பேணி ஷேமத்திற்காகப் பிரார்த்திப்போம்

உலகில் வாழும் கோடிக்கணக்கான இந்துக்கள் அனுஷ்டிக்கும் தீபாவளித் திருநாள் இன்றாகும். இப்புனித நாள்பற்றி எமது இதிகாச புராணங்களில் பல்வேறுபட்ட தகவல்களைக் கண்டுகொள்ள முடிகின்றது.

வனவாசத்தைப் பூர்த்திசெய்த இராமபிரான் அயோத்தி மாநகருக்குத் திரும்பிய நாள் தீபாவளித் தினமென்றே போற்றப்படுகின்றது. ஸ்ரீ இராமபிரானைக் கண்ட அயோத்தி மக்கள் மகிழ்ச்சியின் மேலீட்டால் வீடுகளிலும் தெருக்களிலும் தீபமேற்றிக் குதூகலித்துக்கொண்டாடினராம். அந்த நாளை நினைவுகூரும் வகையில் புனித தீர்த்த நீராடிப் புத்தாடை அணிந்து தமது ஆன்மார்த்த பிரார்த்த வழிபாடுகளை நிறைவு செய்துகொண்டு தீபமேற்றி இனபந்துக்களுடன் கூடி அறுசுவை உணவுப்பண்டங்களை உண்டு மகிழ்ந்து வரும் வழக்கம் மரபாகிவிட்டது.



மகாபலிச் சக்கரவர்த்தி குறுநில மன்னர்கள் பலரைப் போரில் வென்று வெற்றிவாகை சூடிய ராஜாதிராஜா அபிஷேகம்பெற்று முடிசூடிக்கொண்ட நாளும் இத்தீபாவளித் தினமே ஆகும். இந் நாளைப் போற்றிப் பேணும் வகையில் பின்னர் வந்த மன்னர்களும் மாபலியை நினைந்து வழிபாடுகள் ஆற்றினர். பரம்பொருளின் அனுக்கிரகம்பெற்ற மாபலி, ஆண்டுதோறும் தீபாவளித் தினத்தன்று பூவுலகத்திற்கு வந்து தரிசிக்கும் பேற்றினைப் பெற்றமையால் இத்தினம் புனிதமாகப் பேணப்பட்டு வருகின்றது.

ஷண்மத ஸ்தாபகரான ஸ்ரீ ஆதிசங்கரர் இத்தீபாவளித் தினத்தில் ஞானபீடமேறி உலகில் ஆத்மீக எழுச்சி ஏற்படுத்தியதும் இந்நாளிலேதான். இந்தியத் திருநாட்டில் இந்துமத சார்புபெற்ற அனைத்து மக்களும் தம் வேறுபாடுகளை மறந்து மகிழ்ந்து குதூகலிக்கும் நாளாக இந்நாள் மிளிர்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

எமது நாட்டிலும் தீபாவளித் தினம் இந்துக்களின் முதன்மையான பண்டிகைகளில் ஒன்றாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

மக்கள் குதூகலிக்கும் பண்டிகை என்பதன் காரணத்தால் இந்நாளில் சிலர் மதுபானங்களை அருந்தி மாமிசபட்சணங்களை உண்டு மகிழ்வதும் சில இடங்களில் காணக்கூடியதாகவுள்ளது. இது மிகமிகத் தவறான செயலென்பதை மக்கள் அறியாதிருப்பதும் ஓர் காரணமாகும். புனிதமான நாள்களில் சிற்றின்பங்களில் மனதைப் பறிகொடுப்பதால் தீராத தோஷங்கள் அவர்களுக்கும் அவர்களைச் சார்ந்தோருக்கும் அவரது பரம்பரை வம்சத்தினர்க்கும் ஏற்பட்டுவிடும் எனத் தெய்வநூல்கள் கூறுகின்றன. ஆதலால் இந்நாளிலாவது இத்தீயசெயற்பாடுகளை நிறுத்திக்கொள்வது இத்தகைய ஈடுபாடுடையோரின் பெருங்கடனாகும்.

மேலும் தீபாவளித் தினம்பற்றிய பெருமைகளைக் காமிகம், காரணம், வாதுளம், சுப்பிரபேதம் போன்ற ஆகமங்கள் மிக விதந்து பேசுவதை நாமனைவரும் அறிந்துகொள்வது மிக அவசியம்.

### பிரார்த்தனைக்குரிய நாள்

இத்தகைய புனிதமான நாளை எமது இந்து மக்கள் பிரார்த்தனை நாளாகப் போற்ற வேண்டும். எமக்கு ஏற்பட்டுள்ள இடர்கள் நீங்க ஸ்ரீ பார்வதி பரமேசுவரனைப் பிரார்த்திக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொருவரையும் சார்ந்தது. இதற்கு ஏதுவாக எமது இந்து சமயப் பேரவை இன்றைய தினத்தைப் பிரார்த்தனை தினமாக அறிவித்துள்ளது. இத்தினத்தில் ஸ்ரீருத்ரஜெபம், திருத்தாண்டகம் போன்றவற்றையும் பாராயணஞ்செய்தல் மிக அவசியமாகும்.

இந்நாளில் வங்கதேசத்தினர் காளியை விஷேடமாகப் பூசிக்கும் நாளாகப் பேணிக்கொள்கின்றனர்.

### கேதாரகௌரீ நோன்பு

ஏனைய பிரதேசங்களில் அம்பிகை ஐயனை நோக்கித் தவமிருந்தநாளாகக் கருதி மிகுந்த பக்தி சிரத்தையோடு பூசை வழிபாடுகள் நடத்தப்படுகின்றன. தீபாவளி அமாவாசையை இறுதியாகக்கொண்டு 21 நாள்கள் அம்பிகை தவமிருந்த காலம் என்பதால் தீபாவளித்தினத்தின் புனிதமும் பெருமையும் மேலும் உயர்ந்துகொள்கிறது. அம்பிகையின் தவத்தின் வலிமையால் சிவபிரான் தனது இடப்பாகத்தை அவளுக்குக் கொடுத்துக்கொள்கிறான். இதனை அபிராமிப்பட்டர் 'இடப்பாகம் கலந்த பொன்னே' என்றும் 'உமையும், உமையொருபாகரும் ஏகவுருவில் வந்து' என்றும் பாடி மகிழ்வதைக் காணக்கூடியதாகவுள்ளது. இதற்கு மேலாகப் பிருங்கி முனிவரின் கதையொன்றும் உண்டு.

தீபாவளி அமாவாசைத் தினத்திற்கு மறுநாள் முருகப்பெருமானின் மிகச்சிறந்த மூன்று விரதங்களாகக் கந்த புராணத்தில் போற்றப்படும், ஐப்பசி வெள்ளி, திருக்கார்த்திகை, கந்தசஷ்டி என்பவற்றில் கந்தசஷ்டி விரதம் தொடங்குவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆகையால் இந்தப் புனிதமான நாளில் புனித நீராடி கர்மானுஷ்டானங்களை நிறைவுசெய்து ஆலய தரிசனம் செய்வது அவசியமாகும்.

மேலும் அன்றைய தினம் ஆதரவற்ற ஏழைகள், சிறுவர்களுக்கு உணவு, உடை போன்றவற்றை வழங்கி அவர்களுக்கு ஆறுதல் கூறுவதும் நோயாளர்கள், சிறைக்கைதிகளைச் சந்திப்பதற்கு செல்வதும் அவர்களுக்கு இனிப்புப் பண்டங்களை வழங்குவதும் எமக்கு நல்ல பலனைத் தரும். இதனை அனைவரும் ஏற்றுச் செயற்படுத்துமாறு மிகுந்த ஆர்வமையோடு கேட்டுக்கொள்கிறோம்.

**சி. சக்திகிரீவன்**

*

தீபாவளி வாழ்த்துக்கள்!

யாழ்.நகரில்! எலக்ரிக், எலெக்ரோனிக் பொருள்களின் விற்பனையில் முன்னணியில் திகழும்

டாட் என்ரப்பிறைஸ்


நிறுவனத்தார் தம் அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள், வர்த்தகப் பெருமக்கள் அனைவருக்கும் உளம் கனிந்து

DE தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

உங்கள் பாவனைப் பொருள்கள் எங்கள் நிறுவனத்தில்.....!

- T.V., டெக், அன்ரனா வகைகள், றேடியோ வகைகள், கசெற் வகைகள்,
- ஓடியோ சீ.டி.பிளேயர்கள், ஓடியோ சீ.டி. MP3 டெக் வகைகள்,
- சார்ஜர் எமேர்ஜென்சி டியூப் லைட்கள், சார்ஜர் லைட்கள்,
- மின்சார விசிறிகள், கைக்கடிகாரங்கள், சுவர்மணிக்கூடுகள்,
- கமரா வகைகள், பிலிம்றோல் வகைகள், போட்டோ அல்பங்கள்,
- 'F' பெர்பியூம் வகைகள், கண்கவர் 'செரமிக்' டீசெற் வகைகள் மற்றும்
- மின் இலத்திரனியல் உபகரணங்கள் இன்னும் பல வகைப்பொருள்களை





வான விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்!

டாட் என்ரப்பிறைஸ்




DE



DART ENTERPRISE

11, 12, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.

11, 12, Model Market (inside), Jaffna.

(C/19274)

## ஆவளியாய் ஏற்றுவதேன் தீபங்கள்?

(காரண விளக்கக் கதை).

வெங்கனலி தங்குகரச் சங்கரனி னாளாம்
பொங்குதிரை தங்கவொலி எங்கணும் பரம்பும்
கங்குனிற மேவுகிற சங்கலையு வேலை
அங்கதனின் நாப்பணி னிலங்குகிற மாலின்
அங்கமொரு செங்கை அதிற்றங்குகிற கூறார்
மங்கலறு வெங்கலிசெய் யுங் கலத்தினாலே
சங்கரிக்கு மக்கணத்தி லங்கசுரனுற்றான்
பங்கமறு மாலடியை 'திங்களனை தூயோய்!
இங்குலவு தேவருட னங்கவனி வாழும்
அங்குமுறு மாக்களுயி ரெங்கணு(ம்) வதைத்தன்
இங்கெனது சாவு இனி இன்பமவர்க்காகும்
பொங்கு துயரோய அவர் புத்துணர்வு மேவ
எங்கணு மிருள்விலகி இன்ப ஒளி வீச
திங்களனை தீபங்களை ஆவளிகள் செய்வர்
அங்ஙன நீ அன்புசெயி னிங்கெனுயிர் வீழும்'
இங்ஙனமே செற்றது மச்சங்கு தரி மாலருள
அங்கசுர னாவி அடங்கிற்று - அதன் பின்பு
இங்குலகி லின்றுவரை பொங்கு களியோடு
பங்கமற கங்குல்விழ இந்துமத சாரார்
எங்குமொளி ஏற்றிடுவரின்னல் பறந்தோட!

*கனலி - நெருப்பு*
*நாப்பண் - நடுவில்*
*செற்றதும் - சொன்னதும்*

- ஜெ.பிறேம்குமார்
கல்வயல்.

## உளம் மிக மகிழ்வோம்!

அரக்கமனம் படைத்த அசுரனும் அன்புவலைப்பட்டு
இரக்க சுபாவங் கொண்ட இத்தீபாவளித் திருநாளில்
பரக்க நல்லருள் செய்யும் பரந்தாமனின் திருநாமத்தை
உரக்க உச்சரித்தே உவகையினாலுள மிகமகிழ்வோமே!

ஆண்டிலொரு தீபாவளியாம் அழகுப் புத்தாடையுடனே
தூண்டாமணி விளக்கில் தூயதீபமேற்றி நாம்மகிழ்வுடனே
போரோய்ந்து நிம்மதியாய்ப் போசனஞ்செய்ய வேண்டுமென
ஆராய்ந்து பார்ப்பவர் யாரினி ஆண்டவனே அருள்செய்வாய்!

நல்லதொரு பண்டிகையாம் நாமும் கொண்டாடிடுவோம்
இல்லையொரு துன்பமினி இன்பமே எமக்கென்று சொல்லி
தொல்லைகள் அகன்று வாழ்வில் மகிழ்ச்சியே மலர்ந்திட
நல்லைக் குமரனே நீதான் நமக்கருள வேண்டுமையா!

- கவிமணி இராசையா ஸ்ரீதரன.

## தீபாவளியே வா! வா!

அவனி தனில் தமிழரினை
ஆதரிக்க எவருமில்லை
இனிய வாழ்வு மலரவில்லை
ஈசன் துணை புரியவில்லை
உறங்கிடவே இடமில்லை
ஊண் எமக்கு கிடைப்பதில்லை
எண் எழுத்து கற்றிடவே
ஏழ்மை நிலை மாறவில்லை
ஐயமது மாறியிங்கு
ஒளி பரப்ப தீபாவளியே
ஓடியிங்கு வாராயோ?
ஔவை வழியை நினைவூட்டி
அஃதே இன்பத்தைத் தாராயோ...

- நாகமணி மகேந்திரலிங்கம்.

## பூபாளம் இசைத்திடு தீபாவளியே!

கங்குல் திரைகிழித்து ஒளிபரப்பும் தீபாவளியே!
காலமெல்லாம் போற்றி உனைப்பாட -
எமக்கு நல்லதொரு சேதி சொல்லி
யுத்த முனையில் கிளம்புகின்ற
அனல்களையும் அடக்கி -
நிரந்தரமான சமாதானத்தைத் தந்துவிடு!

அக்கிரமங்களுக்கு சாவுமணி அடித்த தீபாவளியே!
அகதி முக(ா)ம்களுக்குள்ளும்...
யுத்தகளங்களுக்குள்ளும்...
சிதறிக்கிடக்கும் எம் தமிழர் சந்ததி
சுதந்திரமாய் விடுதலைக்கீதம் பாட -
நல்ல தீபமேற்றி தித்திப்பை சேர்த்துவிடு!

கொடிய அரக்கனைக் கொன்றொழித்து - நடந்த
கொடிய ஆட்சிக்கு இறுதிவைத்த தீபாவளியே!
கண்ணீரையே யாசிக்கும் எமக்கு
பறிக்கப்பட்ட சுதந்திரமும்...
உருக்குலைக்கப்பட்ட நிம்மதியும்...
முகாரிகள் மறைந்த வாழ்வும் கிடைத்திட -
பூபாளம் இசைத்திடு... நம்பிக்கையோடு!

- சி.சிவகௌரி
மட்டுவில் வடக்கு.

# உதயன் - தீபாவளி சிறப்பு மலர்

# ஆணவமும் அசுர குணமும் அகல இருள் நீக்கி ஒளிபரப்பும் நன்னாள்!

ஒவ்வொரு சமயத்தவரும் தத்தமது பண்பாட்டைப் பேணி, சமூகத்தைப்பேணி, சமயத்தைப்பேணி, மரபைப்பேணி மறுமலர்ச்சி பெற உதவிபுரிவன பண்டிகைகளே.

உலகமெங்கும் வாழும் இந்து மக்கள் இன்று தீபாவளித் திருநாளைக் கொண்டாடுவார்கள். அதிகாலையில் குளிதது, முழுகி, புத்தாடை அணிந்து, ஆலயங்களிலேகூடி, இறைவனை வழிபட்டு, உறவினர்களை, அண்டை அயலவரைச் சந்தித்து, அன்பைப் பரிமாறி, வறிய மக்களுக்கு வாரி வழங்கி மனமகிழ்வு கொள்ளும் மகத்துவத் திருநாளே இதுவாகும்.

தீபாவளித் திருநாள் ஆடம்பரத்திற்கோ, வெறும் கேளிக்கைகளுக்கோ உரிய நாளன்று. இதன் அர்த்தத்தை நாம் அனைவரும் சிந்தித்து, உணர்ந்து கொண்டாடவேண்டும்.

தீபாவளித் திருநாள் இருள் நீக்கி ஒளி பரப்பும் நன்னாள். எமது அகத்திலே இருள் ஆகிய ஆணவமும் ஒளியாகிய திருவருளும் உண்டு. இருளை அசுரகுணம் என்றும் ஒளியைத் தேவகுணம் என்றும் கூறுவார்கள். எமது வாழ்நாளே தேவ - அசுர நிலையில் தான் நிற்கிறது. யார் எங்கு யுத்தம் செயதாலும் அது அவரவர்களின் உள்ளத்தில் நடக்கும் போராட்டத்தின் வெளி அடையாளமே தவிர வேறு இல்லை. வெளி உலகப் போராட்டத்தைவிட இது பயங்கரநிலைப் போராட்டம். இப்போராட்டத்தில், எமது வாழ்வில் நாம் வெற்றி பெற வேண்டுமெனில் தெய்வீகத் தன்மையை எமது அகத்துள் வளர்த்து இன்றைய தீபாவளித் தினத்தில் நற்காரியங்களைச் செய்ய வேண்டும்.

பிறரைக் கெடுத்துத் தான்மட்டும் வாழ நினைத்தல் அசுரகுணம். தானும் தன் இனமும் தன்நாடும் வாழ நினைத்தல் தேவகுணம். ஏழைகள் கண்களிலிருந்து நீர் வரச்செய்யாமல் நடந்து கொள்ளல் தேவகுணம். நியாயம் அல்லாத வழியில் பொருளைச் சேர்த்தல் அசுரகுணம் தீய ஆசையின் நிமித்தம் பாவங்களைச் செய்தல் அசுர குணம். இறைவழிபாட்டாலும், அறிவினாலும் கொடிய ஆசைகளை அடக்குதல் தேவகுணம். மற்றவர்களுக்கு மனம், மொழி, காயத்தால் நன்மையே செய்யவேண்டும் என நினைப்பது தேவகுணம். பிறருக்குத் துன்பம் செய்ய நினைப்பது அசுரகுணம்.

**கந்தனடியான்**

ஒவ்வொரு ஆத்மாவும் இயற்கையில் நல்லவர்கள்; தெய்வத்தன்மை கொண்டவர்கள். ஆனால் அசுரகுணம் அவனைத் தன்பக்கம் இழுக்கிறது; நற்காரியங்களைச் செய்யவிடாது தடுக்கிறது. இவற்றுக்கிடையில் ஆன்மா மாட்டிக்கொண்டு போராடுகின்றது. திருவருளின் துணையுடன் அசுரகுணங்களை அடக்கும் ஆத்மாவின் வாழ்வில் ஒளிபிறக்கும் என்பதை உணரவே தீபாவளித் தினத்தில் ஒளியேற்றி வணங்குகின்றோம்.

கலியுகத்தில் தெய்வநம்பிக்கை ஒவ்வொருவரிடமும் குன்றியதால் தீய செயல்களைச் செய்ய எத்தனிக்கின்றனர். இவர்கள் திருந்துவதற்கு வழி தெய்வத்தன்மையை வளர்த்து அசுரத் தன்மையை அழிக்க வேண்டியது தான். தீபாவளி வரலாற்றைக் கூறும் 'நரகாசுரன் வதம்' என்ற கதையும் *நாம அசுரத்தன்மையை அடக்கி, வாழ்வில் வெற்றிகாண வேண்டும்* என்ற அர்த்தத்தையே விளக்குகின்றது.

தனக்குமேலே தெய்வம் ஒன்று இல்லை என்று நினைப்பதும், அறநெறிகளுக்குக் கட்டுப்படாமல் மனம்போன போக்கில் சுயநலத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு செயற்படுவதும் அசுரத்தன்மை என தீபாவளியின் அர்த்தம் வரையறுத்துக் கூறுகின்றது. மனிதனிடம் மதம் புகுந்தால் அழிவான். யானைக்கு கண்ணமதம், கரடமதம், கபோலமதம் என்ற மும்மதங்கள் உண்டு. அதுபோல மனிதனிடமும் தனமதம், வித்யாமதம், குலமதம் என்ற மும்மதங்கள் இருக்கின்றன. இந்த மும்மதங்களால் அழிகின்றனர் பலர். ஆகவே அறிவென்னும் ஆயுதத்தால் நாம் மதங்களை அடக்கி, புண்ணிய தர்மங்களில் ஈடுபட்டு, பக்தி வயப்பட்டு வாழ வழிகாட்டுவது தீபாவளியின் வரலாறாகும்.

இறைவன் எம் உள்ளத்தில் எழுந்தருள வேண்டுமேயானால் எம் உளளம் தூய்மையாக, ஒளிமயமாக இருக்க வேண்டும் அழுக்காறு, அவா, வெகுளி, காமம், பொய், கொலை, இன்னாச் சொல் முதலிய அசுத்தங்கள் நிறைந்த உள்ளத்தில் இறைவன் இருக்கமாட்டான். ஆகவே மனதில் பகுத்தறிவு, பக்தி, அன்பு, பொதுநலம் போன்ற தீபங்களை ஏற்றி, இறைவனை அகத்தில் இருத்தி இன்றைய தீபத்திருநாளில் அமைதியையும், சமாதான வாழ்வையும் வேண்டிப் பிரார்த்திப்போமாகுக. ☆

## நல்லை ஆதீன முதல்வரின் தீபாவளி தினச் செய்தி



தீபத் திருநாளாம் இந்நன்னாளில் தீப வரிசைகள் ஒளிவிட்டுப் பிரகாசிப்பது போல் தமிழர்கள் வாழ்வில் விடிவு ஏற்பட்டு ஒளி பிறக்க வேண்டும். தீமைகள் விலகி, துன்பங்கள் அகன்று, துயரங்கள் நீங்கி எல்லோரும் ஒற்றுமையாக, ஒளிமயமான வாழ்வு வாழ்வதற்கு வழிபிறக்கவேண்டும்.

தீபாவளிப் பண்டிகை வருடாவருடம் கொண்டாடப்படுகிறது. பழையன கழிதலும் புதியன புகுதலும் பண்டிகைகளின் நோக்கமாக இருக்கும் போது நாமும் அதைக் கைவிடாது கொண்டாடி மகிழும் நாள்தான் தீபாவளி. எல்லோரும் புத்தாடை அணிந்து, புத்துணர்ச்சி யோடு புதுவாழ்வு வாழ ஒரு புதுயுகம் மலர வேண்டும். இந்த நன்னாள் முதலாக தமிழ் மக்கள் சுயவிருப்பத்துடன், தங்கள் மனஎண்ணங்கள் ஈடேறவேண்டி, நல்லைக் கந்தன் தாள் பணிந்து மகிழ்ச்சியோடு, இன்பமான சந்தோஷம் மலர வேண்டுமென்று உளமாரப் பிரார்த்தித்து நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து நல்லாசிகள் கூறுகின்றோம்.

*"என்றும் வேண்டும் இன்ப அன்பு"*

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்,
2ஆவது குருமஹா சந்நிதானம்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

## யாழ். ஆயரின் செய்தி



***அன்புச் சகோதரர்களே!***

அரக்கர் தோல்வியுற்று மானிடத்தின் வெற்றியை நினைவுகூரும் இத்தருணத்தில் மானிடமாண்பை எமது சமூகத்தில் அழிவுக்குள்ளாக்கும் நவீன அரக்கத்தன்மைகள் அழிவுற்று மானிடம் தழைக்க இத்திருவிழா எமக்கு வழிகாட்டட்டும்.

தீபத் திருவிழாவாம் தீபாவளித் திருவிழாவை கொண்டாடும் இந்து அன்பர்கள் அனைவருக்கும் எனது அன்பு கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

இறைபணியில் இணையும்
**பேரருள் திரு. தோமஸ் சவுந்தரநாயகம்,**
யாழ். ஆயர்

## வாசுதேவன் கண்ணன்!

இருட்டினில் வாழ வேண்டும்!
இனிப்புக்களுண்ண வேண்டாம்!
கோடியுடுத்த வேண்டாம்!
கூடி வாழவேண்டாம்!
கொண்டாட்டங்கள் வேண்டாம்!
பாழுமரக்க நரகன்,
வாழ உரிமை பறித்தான்! வதைத்தான்!

கேட்டவுடன் ஓடிவந்தான்,
நாட்டமுடன் கண்ணன்!
கொடியன் நரகனை யழித்தான்!
விடிவை யெமக்குத் தந்தான்!
கோடியை யுடுத்துங்கள்!
வடிவா யேற்றுங்கள் தீபம்!
வாய் மலர்ந்தருளினான்
பேசும் மொழியால்,
'தீபாவளி' யென்றான்
வாசுதேவன் கண்ணன்!

மாருதி
*ஆவரங்கால்.*

## சக்திமிக்க தீபஒளி!

காரிருளை நிலையாக்கி கனம்நீளும் காலமதில்
கொலுவிழந்த நெஞ்சோடு காலையிலே துயிலெழுந்து
சோர்விழந்த சிந்தையது நல்லொளியை நாடிநிற்க
சக்திமிக்க 'தீபஒளி' சுடரோங்கி விடிவுதரும்
ஊரெல்லாம் தேடியே அமிர்தத்தைக் குடித்தாலும்
உறவெல்லாம் தம்மனையில் வாழும்நல் நிலைவேண்டும்
பாரினிலே படிந்திட்ட கறையதனை ஒளியதனால்
பதியகற்றி வாழுகின்ற பேறெமக்கு வாராதோ!

அல்லையூர் கே.ஆர். திருத்துவராஜா.


# தீபாவளி வாழ்த்துக்கள்

## ஒரு புதிய சிந்தனை - ஒருமித்த புதிய பாதை

## ஞானசுந்தரம் ஆனந்தகுமார்

**அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுக்கும் இடையில் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையை உடன்படுத்தி, போருக்கு ஒரு முற்றுப்புள்ளி அளித்துப் பழைய பசுமையான வடக்கு - கிழக்கு சூழ்நிலையை மீண்டும் பெற்றெடுக்க டிசெம்பர் 5ஆம் திகதி மக்கள் சக்தியால்**

**ஞானசுந்தரம் ஆனந்தகுமாரை நாடாளுமன்றத்துக்கு அனுப்புவோம்.**

**இது எனது உறுதிமொழி.**




(C/19199)

# உதயன் - தீபாவளி சிறப்பு மலர்


எமது அன்புக்கினிய வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது இதயங்கனிந்த

தீபாவளி நல்வாழ்த்துக்கள்!



நாளைய நாகரிகத்தினை இன்றே அறிமுகம் செய்து வைப்பதில் தல ...கன ஒரு தனிஇடம் வகிப்பவ...கள்:

**CITY TAILORS**

*(Specilist For Wedding Coat & Suit)*

புடைவைத் தினுசுகள் அனைத்தையும்! தரம்! மலிவு!! அமோக தெரிவிற்கு !!!

அன்றும் இன்றும் என்றும்

**சிற்றி ரெக்ஸ் & ரெயிலர்ஸ்**

(புடைவைத் தினுசுகளின் ராஜ முத்திரை)

இல.73, பெரியகடை வீதி - யாழ்ப்பாணம்.

கிளை } 123, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
535A, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி



யாழ்.நகரில் தரமான தளபாடப் பொருள்களையும் (பிளாஸ்ரிக் கதிரைகள் உட்பட), மெத்தை (மற்ட்றெஸ்) வகைகளையும் உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்திட

**MANGALA FURNITURE MART**

இல.153, கஸ்தூரியார் வீதி, (C-19240) யாழ்ப்பாணம்.

நலங்காணும் நன்னாளாம் இந்நாளில் எங்கள் இதயம் நிறைந்த

**தீபாவளி நல்வாழ்த்துக்கள்!**





மணிக்கூடு, றேடியோ, கசற், T.V, டெக், ஸ்ரபிலைசர், அம்பிரிபயர் என்பனவற்றை நவீன தொழில்நுட்பத்திறன் மூலம் உடனுக்குடன் குறித்த தவணையில் திருத்திக்கொள்ள உடன் நாடவேண்டிய இடம்:

**செல்வா வோச் வேக்ஸ்**

இல.60, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C-19271)

இன்பத் தீபத்திருநாளில்

மாணவர்கள், அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த

*தீபாவளி வாழ்த்துக்கள்!*

Head Office.

**IBMS**

(Affiliated to Barrington University of USA)

**No.701, K.K.S. Road, Jaffna.**

T.P.No: 021 - 3165

**Branches:-**

N.M.M.V.Road, Nelliyady. (C-19270)

Main Road, Chankanai.

எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் எம் இனிய

தீபாவளி வாழ்த்துக்கள்!



**சுப்பர் சூஸ்**



***SUPER SHOES***

நவநாகரிகத்திற்கு ஏற்ற வகையில் அனைத்து வகையான காலணிகளையும் ஒரே இடத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

DSI, RANPA பாதணிகளின் யாழ்.குடாநாட்டுக்கான ஏக விநியோகஸ்தர்கள்.

(C-19258) 75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சாந்தி , சமாதானம், சுபீட்சம், அமைதி நிறைந்த வாழ்வை தமிழ் மக்களும் எமது வாடிக்கையாளர்களும் அன்பர்களும் நண்பர்களும் எய்திட

எமது தீபாவளித் திருநாள் நல்வாழ்த்துக்கள்!

**ஈஸ்வரன் ரேடர்ஸ்**



இல 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 - 2813

**மிதிவண்டி, மிதிவண்டி உதிரிப்பாகங்கள் விற்பனைகள்.**

யாழ்.நகரில் பாவனையிலுள்ள லுமாலா மிதிவண்டி, மிதிவண்டி உதிரிப்பாகங்கள் அனைத்தையும் பாலர்கள் முதல் பள்ளிச் சிறுவர்கள் வரை பெற்றுக்கொள்ள யாழ்.நகரில் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்..... (C-19241)

# உதயன் - தீபாவளி சிறப்பு மலர்




அதர்மம் அழிக்கப்பட்டு, தர்மம் நிலை கொள்ள சான்று பகரும் தீபாவளித் திருநாளே வருக! வருக!! என வரவேற்று,
அகிலமெங்கும் தூய ஒளிபரவிட வேண்டி அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
தன் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது




★ விநாயகர் புடைவை அகம் ★

61A-62A-63A, நவீன சந்தை (உட்புறம்) யாழ்ப்பாணம்.

முகூர்த்தப் பட்டுப் புடைவைகள், பட்டு வேஷ்டிகள், பட்டுச் சேலைகள், பிளவுஸ் தினுசுகள் மற்றும் அனைத்து ரக ஆடைகளுக்கும் கைராசியான ஸ்தாபனம் (C/19204)

வையத்தில் மகிழ்ச்சியுடன் வாழ்வாங்கு வாழ, இன்ப வாழ்வுக்கு
உறுதுணையாய் அமைதி, சமாதானம் நிலைபெற்று ஓங்க
தன் இனிய தீபாவளி வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கிறது



நிஷானந்தா ஜுவல்லரி

75, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



நம்பிக்கை நாணயம்
உத்தரவாதம்
தரம்மிக்க தங்க, வைர நகைகளை
உங்கள் தேவைக்கேற்பப்
பெற்றுக்கொள்ள:
அழகு நங்கையரின் அழகுச்சோலை நிஷானந்தா
தங்கத்தின் தரம் நிரந்தரம் - தரத்தை நிர்ணயிக்க நிஷானந்தா
(C/19205)

தீபாவளி நல்வாழ்த்துக்கள்
அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தன்
இனிய தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவிப்பது

காவேரி சில்க்ஸ்



நதிகளில் அழகு தருவது காவேரி
நவீன உலகுக்கு அழகு சேர்ப்பது
காவேரி சில்க்ஸ்
- சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகள்!
- மங்கையர் மனங்கவர் வண்ண ஆடைகள்!
- ஆடவர், குழந்தைகளுக்கான ஆடைகள்

அனைத்தையும் ஓரிடமாகப் பெற்றிட
நாடுங்கள்:

காவேரி சில்க்ஸ்

இல.48, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
T.P.2333 (C/19206)

தீபாவளி வாழ்த்துக்கள்
அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்களைத்
தெரிவிக்கின்றது
துஷா ஒப்ரிசன்ஸ்
- கண்ணுக்குக் கண்ணாய் உங்களுக்குக் கைகொடுக்கக் காத்திருக்கிறது துஷா
- கண்புரைக்கான அறுவைச் சிகிச்சை செய்கின்றவர்களுக்குக் கண்ணுக்குள் பொருத்தப்படும் லென்ஸ் (INTRAO COULAR LENCE) ஏக விநியோகஸ்தர்:





துஷா ஒப்ரிசன்ஸ்

544, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
- கண் பரிசோதித்து கண்ணாடி வழங்குபவர்கள். (C/19207)

தீபாவளி நல்வாழ்த்துக்கள்
புடைவை உலகில் புதியதோர் உதயமாம்
சௌமியா ரெக்ஸ்
அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தனது
முதலாவது தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது!
ஆடை உலகுக்கு ஓர் அரும்பெரும் பொக்கிஷம்



சௌமியா ரெக்ஸ்
- காலத்திற்கேற்ப கவர்ச்சி வடிவங்களில் அழகிய ஆடைத்தினுசுகள் அத்தனையும் அங்கிங்கென்றலையாது ஓரிடமாகப் பெற்றிட நாடுங்கள்:

சௌமியா ரெக்ஸ்

இல.4, பஜார் வீதி, யாழ்ப்பாணம். (C/19208)

ஜெசிபா ஏஜென்சியின் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்
எமது அன்புக்கினிய வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும
இனிய தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வுறுகின்றோம்!
அனைத்துக் கட்டடப் பொருள்கள், இலங்கையின் முதல் தரமான *[No.1]* மிற்சுயி *[MITSUI]*. அட்லஸ் *[ATLAS]* சீமெந்து
மற்றும் தரமான எஸ் ' லோன் நீர் வழங்கும் குழாய்கள் ஆகியவற்றின் யாழ்.குடாநாட்டுக்கான ஏக விநியோகஸ்தர்கள்:



ஜெசிபா ஏஜென்சி



132, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P:2407 **ALSO AGENTS FOR C.I.C PAINTS [PVT] LTD.** FAX:2140

- *மிற்சுயி, அட்லஸ் சிமெந்துகள் சர்வதேச அங்கீகாரம் பெற்றவை என்பதுடன் [ISO 14001] இலங்கை தரக் கட்டுப்பாட்டுச் சபையினாலும் அங்கீகரிக்கப்பட்டு [SLS 107] முத்திரை பொறிக்கப்பட்டவை.* (C/19212)

# உதயன் - தீபாவளி சிறப்பு மலர்


எமது அன்பான வாடிக்கையாளர்கள், நண்பர்கள்,
அனைவருக்கும் எம் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்!
தரமான உணவு வகைகளை இதமாக ருசித்திட
நாடவேண்டிய ஒரே இடம்:

சாந்தி கபே

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட எமது தயாரிப்புக்கள்:
❖ சிக்கன் புரியாணி ❖ மட்டன் புரியாணி
❖மரக்கறி புரியாணி ❖சிக்கன் நூடில்ஸ்
❖மட்டன் நூடில்ஸ் ❖முட்டை நூடில்ஸ்
❖சூப் வகைகள்
போன்ற தரமான, சுவையான
உணவு வகைகளை ஓடர் செய்து
பெற்றுக்கொள்ள நாடுங்கள்:



சாந்தி கபே
278, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C/19237)



வாடிக்கையாளர்களுக்கு
எமது தீபாவளி வாழ்த்துக்கள்!
எம்மிடம் சகலவிதமான



✧ கைக்கடிகாரங்கள்
✧ சுவர் மணிக்கூடுகள்
✧ ஓடியோ, வீடியோ கசற், CDகள்
✧ கசற் றேடியோ வகைகள்
✧ வீடியோ, ஓடியோ, CDபிளேயர், டெக் வகைகள்
✧ கணனிகள், கணனி உதிரிப் பாகங்கள்.

நியாயமான விலையிலும்
சகல நிகழ்சிகளையும், வீடியோ நாடாவில் இருந்து
CDயில் பதிவு செய்தும் பெற்றுக்கொள்ள

அல்டி எலக்ரோனிக்ஸ்
15, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/19236)



மாணவர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்களுக்கு
STP ஸ்தாபனத்தாரின் தீபாவளி நல்வாழ்த்துக்கள்




for students following higher education
உயர் கல்விப்பீட மாணவர்களிற்கான பாடத்திட்டத்தைக் கொண்டது.
மேலதிக விபரங்களிற்கு

STP Computer World (Pvt.) Limited.
54A, Palaly Road, Kantharmadam, Jaffna
TP: 021-2674 E.Mail stpedu@hotmail.com



தித்திக்கும் இத்தீபாவளித் திருநாளில் என்றும் மனதில் ஒளிவீச வாழ்த்துகின்றோம்
தினம் தினம் புதுமையுடன் மலரும் நாகரீக உலகின் புதுமைமிகு
புத்தம்புதிய புடைவைகளை அறிமுகமாக்கித் தன்னிகரில்லா விளங்கும்

ஜி.எஸ்.லிங்கநாதன் அன் கோ



வாடிக்கையாளர், நண்பர்கள், ஆதரவாளர்களின்
இடவசதி கருதி,
இல.79, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரியில் எமது கிளை ஸ்தாபனம் 01-11-2001
திங்கள் முதல் இயங்குகிறது என்பதை அனைவருக்கும்
மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
உங்கள் ஆதரவை நாடும்:

ஜி.எஸ்.லிங்கநாதன் அன் கோ

இல.13, 14, பெரியகடை, யாழ்ப்பாணம்.
இல.79, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(C/19238)



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவரது இல்லங்களிலும் எண்ணங்களிலும்
தூய ஒளி துலங்கிட



வீ.எம்.கே.ஜூலர்ஸ் ஸ்தாபனத்தாரின்
தீபாவளி வாழ்த்துக்கள்.
மங்கையரின் எழில்மிகு தோற்றத்திற்கு
மேன்மேலும் மெருகூட்ட அசல் 22 கரட்
தங்க நகைகளை அணிந்து மகிழ்ந்திட,
நீங்கள் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்

வீ.எம்.கே. ஜூவலர்ஸ்
கண்டி வீதி,
சாவகச்சேரி.
T.P. 070 - 212989.
தற்போதைய முகவரி:-
இல.305, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/19234)



அனைவரதும் உள்ளங்களிலும் இருளகன்று ஒளி பெற்று மகிழ்ந்திட எம்மினிய
தீபாவளி வாழ்த்துக்கள்

அம்பிகா நகை மாளிகை



தங்கப் பவுண்
நகை வியாபாரம்
Abinaya Jewellers

மென்மைக்கு மெருகேற்றும் இளமைக்கு எழிலூட்டும் தங்க நகை உலகில்
புகழ் கொண்டு விளங்கும்

அம்பிகா நகை மாளிகை
(உரிமையாளர். தி.சிவலிங்கம்)
122, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(பெற்றோல் நிலையம் முன்பாக)
(C/19239)



மெலோடியஸ் மியூசிக்கின்
அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது இனிய
தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
☞ புதிய, பழைய சினிமாப் பாடல்கள்
☞ புதியபக்திப்பாடல்கள் அனைத்தும் ஓடியோ CDயிலிருந்து CDயிலும்
ஓடியோ கசற்றிற்குப் பதிவு செய்துகொள்ள
முன்னணியில் உள்ள சிறந்த ஸ்தாபனம்



மெலோடியஸ் மியூசிக்
இல.303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C/19233)



எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தீபாவளி
வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்

அபிநயா ஜூவலர்ஸ்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
உங்கள் இளமைக்கு மேலும்
மெருகூட்டும் கண்கவர் 22ct. தங்கநகைகளைப்
பெற்றிட யாழ்நகரில் சிறந்த ஸ்தாபனம்

32, Kasthuriar Road,
JAFFNA.
Abinaya Jewellers
32, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/19235)

# உதயன் - தீபாவளி சிறப்பு மலர்




நம்புலம் செழித்திட சமாதானமே விளைந்திடுக!
அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எம் இனிய
**தீபாவளி நல்வாழ்த்துக்கள்!**
நாளுக்கு நாள் மாறும் நவநாகரிக உலகில்
உங்கள் எழிற்கோலங்களை புதியபுதிதாய் மிளிர
வைக்க – வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி
செய்யப்பட்ட அனைத்து ரக
புடைவைத் தினுசுகளுக்கும்!..........
சின்னஞ்சிறுசுகளில் இருந்து பெரியோர் வரை
ஆடவர், மகளிர் அனைவருக்குமே
வேறெங்கும் அலையாது பெற்றுக்கொள்ள!.....

★முகூர்த்தப் பட்டுப்புடைவைகளுக்கு முதற்றரமானதும், கைராசியானதும்!

**மகா சில்க்ஸ்** புடைவை ஸ்தாபனம்
32, 40A, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.

★குறுகிய காலத்தில் எண்ணற்ற வாடிக்கையாளர்களைத் தன்னகத்தே கொண்டதால் இடநெருக்கடியைத் தவிர்க்கும் வகையில் உங்களுக்கென அமைக்கப்பட்ட மற்றுமொரு நிறுவனம்தான்

**பியூட்டி சில்க்ஸ்** புடைவை நிறுவனம்
இல.69, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.
(C/19255)



அகிலமெங்கும் அமைதி நிலவிட
சமாதானப் பேரொளியாய் புலர்ந்திடு தீபாவளிப் பொழுதே!
அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
**சீமாட்டியின் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!**

திருமண முகூர்த்தப்
பட்டுப்புடைவைகளுடன்,
நீங்கள் விரும்பும் அனைத்து ரக
துணிமணிகளையும்,
உங்கள் எண்ணம் போல
வண்ணம் வர்ணமாகத்
தெரிவுசெய்திட........ நாடுங்கள்:



**சீமாட்டி புடைவைக்கடல்**
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

**மங்கை சில்க்**
15, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(C/19213)



அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது இனிய
**தீபாவளி நல்வாழ்த்துக்கள்!**

**துர்க்கா நகைப் பூங்கா**



எக்காலமும் மாற்றீடு இல்லாத
நவீன மோஸ்தர்களில்
உங்கள் விருப்பத்துக்குரிய
நகைகளைப் பெற்றிட......
நாடுங்கள்:

**துர்க்கா நகைப் பூங்கா**
கன்னாதிட்டி, 71, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

- உங்களுக்கு வேண்டிய அழகிய தங்க நகைகளை வேண்டிய நவீன டிசைன்களில வடிவமைத்துத் தருபவர்கள்.
- ஓடர் நகைகளைக் குறித்த தவணையில் அசல் 22 கரட்டில் உத்தரவாதத்துடன் செய்து கொடுப்பவர்கள்.

**துர்க்கா நகைப் பூங்கா**
(C/19214)



யாழ்நகரில்

**கரன் ரெக்ஸ்**

வேண்டிய தரமான ஆடைவகைகளைத் தெரிந்திட கரன் ரெக்ஸ்
தரம் என்றால் கரன்....... கரன் என்றால் தரம்.
தரம் நாடுவோர் நாடுமிடம் கரன்!!!
குறுகியநாள்களுக்குள் அதிக அளவில் - ஆயிரக்கணக்காக
இணைந்துகொண்ட வாடிக்கையாளர்கள், இணையவுள்ள
வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தனது
**முதலாவது தீபாவளி வாழ்த்துக்களைத்**
தெரிவிப்பதில் மகிழ்ச்சியுறும் ..........


**கரன் ரெக்ஸ் புடைவை ஸ்தாபனம்**
106, பஜார் வீதி, யாழ்ப்பாணம்.

**கரன் வோச் அன் ரேடியோ**
91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**கரன் வோச் அன் ரேடியோ**
சுன்னாகம்.

(C/19216)
உரிமையாளர்: கரன்.







நண்பர்கள், வாடிக்கையாளர்கள்,
அன்பர்கள் அனைவருக்கும்
எம்மினிய குளிர்ச்சிமிக்க
தீபாவளி
**நல்வாழ்த்துக்கள்!**

காலங்காலமாக உங்களைக்
குளிர்ச்சிக் கடலில் மூழ்கடித்து ஞாலத்தில்
நற்பெயரைத் தட்டிக்கொண்டு நிற்பது!

**லிங்கம் கிறீம் ஹவுஸ்**





தரமானதும் சுவை மிக்கதும், சுகாதார முறைப்படி
தயாரிக்கப்பட்டதுமான
அனைத்து ரக
☆ ஐஸ் கிறீம் வகைகளுக்கும்
☆ இதர சிற்றுண்டி வகைகளுக்கும்
யாழ்.குடாநாட்டில் நன்மதிப்புப் பெற்றவர்கள்



226, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
கிளை:
சங்கானை வீதி,
மானிப்பாய்.
(C/19217)

# உதயன் - தீபாவளி சிறப்பு மலர்

## அமைச்சர் டக்ளஸ் தீபாவளி வாழ்த்து

யாழ்ப்பாணம்,நவ.14

இன்று தீபாவளித் திருநாள் தீமைகளைத் தேடி அழித்து நல்லொளி வீசச்செய்யும் நன்நாள். புத்தாடை புனைந்து, நல்லாசிகளை நாடிச் செல்லும் பொன்னாள்.

- இவ்வாறு அமைச்சரும் ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமுமான கே. என.டக்ளஸ் தேவானந்தாவின் தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இந்த நன்நாளில் நல்ல சிந்தனைகள் மேலோங்கவும் நல்ல வளம் வாழ்வில் பெருகவும் ஒவ்வொருவரையும் வாழ்த்துகின்றேன். தீபாவளித் திருநாளின் மகிழ்ச்சி இந்த நாட்டில் எங்கும் என்றும் நிலைபெறட்டும். அதற்கு யுத்தம் அகன்ற நிம்மதியான அமைதிச் சூழல் தோன்றட்டும். இதற்காக சமாதான சகவாழ்வு காணும் நடைமுறைச் சாத்தியமான மாற்று வழியில் நடைபோட ஒவ்வொருவரும் முன்வரவேண்டும்.

இவ்வகையில் பொறுப்புணர்வுடன் நிதானமாகச் சிந்தித்து விவேகமான முடிவைப் பொதுமக்கள் ஒவ்வொருவரும் வெளிப்படுத்த முன்வரவேண்டும். - என்று உள்ளது. (க)

## டாக்டர் ஜயலத் வாழ்த்து

கொழும்பு,நவ.14

சொல்லொணாத் துயரங்களுக்கு மத்தியில் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடும் என்றும் என் மதிப்பிற்குரிய இந்துப் பெருமக்களுக்கு தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஐ.தே.க. முன்னாள் எம்.பியான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா தமது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது:-

போரின் அவலங்களுக்கு மத்தியில் சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவிக்கும் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களும் உழைப்பிற்கேற்ற ஊதியமும் சமூகநல வசதிகள் இன்றி பெருந்தோட்டத் துறையில் வாழும் மலையக மக்களும் அநாவசியமான பாதுகாப்புக் கெடுபிடிகளால் தினமும் வேதனைகளை அனுபவிக்கும் தமிழ் மக்களும் நாம் இலங்கையின் தேசிய இனம் என்ற ஒரு தன்னம்பிக்கை உணர்வுடன் நிம்மதியாக, அடுத்த தீபாவளியை தம் உற்றார், உறவினர், சுற்றம்சூழ மகிழ்வோடு கொண்டாடுவர். இது நிச்சயம். இதனை ஆழ்ந்த நம்பிக்கையுடன் இந்த நன்னாளில் தெரிவிக்கின்றேன்.

நெடுங்காலமாக துயரத்துடன் வாழும் தமிழ்மக்களுடன் என்றும் அவர்களின் துன்ப, துயரங்களில் பங்குகொண்டு வாழும் நான் தொடர்ந்தும் அவர்களின் அல்லல்களைப் போக்க முன்நிற்பேன் என்றும் நிரந்தர சமாதானத்தையும் சுபிட்சமான வாழ்வையும் வழங்கப் புதிய பாதையை நோக்கிச்செல்லும் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் சேர்ந்து என்னையும் அர்ப்பணிப்பேன் என்றும் இத்தீபாவளித் திருநாளில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக
உங்கள் நன்மதிப்பைப் பெற்றது
CANNA மார்க் கற்பூரம்




தயாரிப்பாளர்கள், விநியோகஸ்த்தர்கள் :
Pushapaa Trading Co
93/4, Central Road, Colombo 11. Tel : 624588, Fax : 591218.

தீபாவளி நன்னாளில்
வாழ்வில் இருளகற்றி
நல் ஒளியினை ஏற்றி
சாந்தியும் சமாதானமும் பெருக
அனைவரையும் வாழ்த்துகின்றோம்.

கொமர்ஷல் வங்கி
உங்கள் ஆதாயமே எங்கள் நோக்கம்

# உதயன் தீபாவளிச் சிறப்பிதழ்


வாடிக்கையாளர்களுக்கு!
எமது இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
க.பொ.த.சாதாரணதர மாணவர்களுக்கு
2001 டிசெம்பர்
வெற்றித் துணைவன் - 1
விலை ரூபா 60/=
சொற்ப பிரதிகளே கைவசமுண்டு, பிரதிகளுக்கு முந்துங்கள்.
ஸ்ரீ லங்கா புத்தகசாலை
தொலைபேசி இல. 2573. 234, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (94495)



நலம் காணும் நன்னாளாம் தீபாவளித் திருநாளில்
எமது நண்பர்கள், வாடிக்கையாளர்கள்,
அனைவருக்கும் எமது உள்ளம்
நிறைந்த இன்பம் பொங்கும்
தீபாவளி
நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.



ஹரிஹரணன் பிறிண்டேர்ஸ்



General & Commercial Offset Printers
&
Computer Designers
424A ,K.K.S.Road,Jaffna.



எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள்
அனைவருக்கும்
எம் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
அற்புதா ரேடிங் கொம்பனி



☆ காகிதாதி வகைகள் ☆ அச்சக பேப்பர் வகைகள்
☆ அச்சக மை வகைகள் ☆ அலுவலக உபகரணங்கள்
☆ பாடசாலை உபகரணங்கள்
மற்றும் அனைத்துப் பொருள்களையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஸ்தாபனம்:
அற்புதா ரேடிங் கொம்பனி
இல.198, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021-2505
(C-19273)



எங்கும் மங்களம் பொங்கிட மக்கள் மனங்களில் அமைதி தழுவிட வந்திடும்
தீபாவளி நன்னாளில் அனைவருக்கும் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்!
லிங்கம்ஸ் சில்க் ஹவுஸ்



நாளுக்கு நாள் மாறும் நவீனரகப் புடைவைகள்,
★ சாறிவகைகள் ★ றெடிமேற் ஆடைகள்
★ ரவுஸர் மெற்றீரியல்ஸ் ★ துணிவகைகள்
ஆடவர், மகளிர், பெரியோர், சிறுவர் சிறுமியர் அனைவருக்கும்
ஏற்ற எக்காலமும் மாறா நவீன ஸ்ரைலுக்கேற்ற ஆடைகளுக்கு
யாழ்நகரில் ஒரே இடம்:
லிங்கம்ஸ் சில்க் ஹவுஸ்
18, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(c-19272)



அலைக்கும் அவலங்கள் தீர்ந்து
நிலைபெற்ற சமாதான வாழ்வைத் தந்திட
மலரும் தீபாவளியே வருக! வருக!!
அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எம் இனிய
தீபாவளி வாழ்த்துக்கள்!
எக்காலத்துக்கும் உகந்த
எழில் வடிவமைப்பில்,
உறுதி,
உத்தரவாதத்துடனான
உங்கள் வீட்டுக்கு
வேண்டிய
தளபாடங்களை வாங்கிக்
கொள்ள நாடுங்கள்:



திரேசா தளபாட மாளிகை
155, 157, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(C-19293)



உ
ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ
பிறேம் நகை மாடம்
PREM NAGAI MAADAM



(தங்கப்பவுண் நகை வியாபாரம்)
அசல் 22 கரட் தங்க நகைகள் ஓடருக்குப் பெற்றுக்கொள்ளவும்,
உங்களுடைய பழைய நகைகளைப் புதுப்பிக்கவும்,
உங்களுடைய நம்பிக்கையான, தலைசிறந்த
ஒரே ஒரு ஸ்தாபனம்.
தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு எமது வாடிக்கையாளர்கள்,
நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் எமது இதயங்கனிந்த தீபாவளி
வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் R.பிறேமகுமார் அவர்களும் அங்கு
பணிபுரியும் ஊழியர்களும் பெரு மகிழ்ச்சியடைகிறார்கள்.

பிறேம் நகை மாடம்,
யாழ்.வீதி,
மானிப்பாய்.

R.பிறேமகுமார்,
தேவாலய வீதி, கூழாவடி,
ஆனைக்கோட்டை.
(94492)



நலங்காணும் நன்னாளாம் இந்நாளில் எங்கள் இதயம் நிறைந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
மங்கையர் மனம் கொள்ளை கொள்ளும் தங்க நகைகளை
குறிப்பிட்ட தவணையில் தரமாகவும் நியாயமாகவும் பெற்றிட நாடுங்கள்:
சிவமகாலட்சுமி நகை அகம்
(ராஜா தியேட்டர் முன்பாக)
176, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ஓம் மகாலட்சுமி நகைமாடம்
இருபாலைச் சந்தி,
இருபாலை. (C/19291)





ஓம் முருகன் நகைமாடம்
பிரதான வீதி,
பண்டத்தரிப்பு.